வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 299 | பக்கங்கள் : 16

# ஒரு சிலர் மீதான தனிப்பட்ட கோபமே தமிழ் அரசு மீதான மக்களின் வெறுப்பு!

## சுட்டிக்காட்டுகின்றார் சிறீதரன் எம்.பி.



கொழும்பு, ஒக். 26

**ஒரு சில நபர்கள் மீதான தனிப்பட்ட கோபமே தமிழரசுக் கட்சி மீது மக்கள் கோபம் கொண்டதுக்கான அடிப்படைக் காரணம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

அந்த கோபத்தின் வெளிப்பாட்டை மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிக்காட்டியதாக அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளையும் மக்கள் அரவணைத்துச் செல்லவில்லை என அவர் கூறினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை தவறு என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளதாகவும் சிறீதரன் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த அரசாங்கங்களில் இந்த நீண்ட நெடும் பயணத்தில் சிறு சிறு பேச்சுவார்த்தைகளுக்கான வழிகள் அல்லது ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இன்னமும் அது குறித்து சிந்திக்கவில்லை.

ஜனாதிபதி தெரிவாகி ஒரு வருடம் கடந்துள்ளது. பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ளது. தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தர அரசியல் பிரச்னை உள்ளது என்றும் அந்த நிரந்தரமான அரசியல் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை வழங்க வேண்டும் என்ற

15

# கந்தரோடையில் வீடு ஒன்றின் மீது குண்டு தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 26

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தரோடை பகுதியில், வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத கும்பல் ஒன்றினால், நேற்று அதிகாலை 12.30 மணியளவில், இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துமீறி உள்நுழைந்த குழுவினர், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி விட்டு, பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதாக, குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில்,

15

# குற்றச் செயல்களுக்கு அரசு அனுசரணையா?

### நாமல் ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு, ஒக். 26

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றதா? என்ற சந்தேகம் நிலவுவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

15

# மதுபோதையில் யாழ்தேவி ரயில் ஓட்டிய தலைமை கட்டுப்பாட்டாளர் நேற்று கைது!

கொழும்பு, ஒக். 26

யாழ்தேவி' ரயிலின் தலைமை ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவர் , கடமை நேரத்தில் மது அருந்திய குற்றச்சாட்டின் பேரில் ரயில் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் அனுராதபுரத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த இந்த ரயில் பிற்பகல் 2.40 மணியளவில் அனுராதபுரம் ரயில் நிலையத்தை அடைந்துள்ள நிலையில் அவர் மது அருந்தியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் அவர் சட்ட வைத்திய

15

# வடமாகாணத்தில் இன்று 13 மணி நேரம் மின்தடை!

யாழ்ப்பாணம், ஒக். 26

வடக்கு மாகாணத்தின் நான்கு மாவட்டங்களிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மின்தடைப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அதன்படி முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாண, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மின் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் 220 கே.வி. மின் பரிமாற்ற வடத்தினை மாற்றியமைப்பதற்கான வேலைகளுக்காகவே இன்றைய தினம் காலை 6.00 மணி முதல் மாலை

15

# ரணில் - சஜித் விரைவில் நேரில் சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் நேரடி சந்திப்பை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இரு தரப்பு இணைவுக்காக இரு கட்சிகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவில் உள்ளவர்கள் பேச்சுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

எனவே, பொதுவேலைத்திட்டத்தின்கீழ் இணைந்து பயணிப்பதற்குரிய இணக்கப்பாட்டை இரு தரப்புகளும் எட்டிய பின்னர், இரு

15

# ரணில்-சஜித் கட்சிகள் சங்கமம் இவ்வருட இறுதிக்குள் வெற்றி!

### தலதா அத்துக்கோரள நம்பிக்கை

கொழும்பு, ஒக். 26

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இவ்வருடத்துக்குள் வெற்றியளிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

15



# கோப்பாய் சந்தியில் நேற்று வாகனங்கள் மோதி விபத்து!

### 6 பேர் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஒக். 26

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

கோப்பாய் சந்தியில் அமைந்துள்ள சமிக்கை விளக்குப் பகுதியில், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனம், ஏனைய வாகனங்களுடன் மோதியதில், குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சமிக்ஞை விளக்கின் புறப்படுகை

15

# அமைச்சு செயலரின் தீர்மானத்தை இரத்து செய்த மின்சக்தி அமைச்சர்

கொழும்பு, ஒக். 26

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சேவைக் காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு எரிசக்தி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட தீர்மானம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த தீர்மானத்தை உடனடியாக அமுலாகும் வகையில் இரத்து செய்யுமாறு எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உத்தரவிட்டுள்ளார்.

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எச். பி. நிரோஷனின்

15

# முன்னாள் எம்.பி.க்கள் பலர் மாகாண தேர்தலில் போட்டி

கொழும்பு, ஒக். 26

அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலில் 30 இற்கு மேற்பட்ட முன்னாள் எம்.பிக்கள் போட்டியிடவுள்ளனர் என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தேசிய மக்கள் சக்தி அலையை சமாளித்து, தமது கட்சிகளுக்குரிய வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்ளும் நோக்கிலும், மக்கள் மத்தியில்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானவர் வழங்கிய தகவலுக்கமைய கஞ்சா கடத்தல்காரர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 26

**நீண்டநாட்களாக இந்தியாவிலிருந்து படகு மூலம் கஞ்சா கடத்தி வந்த கடத்தல்காரர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

கைது செய்யப்பட்ட கஞ்சா கடத்தல்காரரிடமிருந்து 10 கிலோ கிராமுக்கும் அதிகமான கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு, புதுக்கடை நீதி மன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "கணே முல்ல சஞ்சீவ" என்பவர் படு கொலை செய்யப்பட்ட சம்ப வத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்திக்கு, இந்தி யாவுக்கு தப்பிச் செல்ல படகு ஏற்பாடு செய்து கொடுத்து உதவியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆனந்தன் என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பில் கஞ்சா கடத்தல்காரர் யாழ்ப்பாணத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கஞ்சா கடத்தல்காரர் படகு மூலம் கஞ்சா மாத்திரம் கடத்தி உள் ளாரா? அல்லது பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்களை இந்தியாவுக்கு கொண்டு செல்ல உதவி உள்ளாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

"கணேமுல்ல சஞ்சீவ" படு கொலையுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்று தலை மறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து ஒக்ரோ பர் 14 ஆம் திகதி கைதுசெய்யப் பட்டு பின்னர் 15 ஆம் திகதி நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இஷாரா செவ்வந்தி வழங் கிய தகவலுக்கமைய இந்தியா வுக்கு தப்பிச் செல்ல படகு ஏற் பாடு செய்து கொடுத்து உத விய ஆனந்தன் என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில், ஆனந்தன் வழங்கிய தகவலின் அடிப்படையில் கஞ்சா கடத் தல்காரர் தற்போது கைது செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.(எ)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் 22 வயது இளைஞன் யாழில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொரு ளுடன் 22 வயது இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய் வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப்புப் பிரி வினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

கைது செய்யப்பட்ட சந் தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்ப டுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(எ-05)

# வவுனியாவில் 5 வருடங்களில் விபத்துகளால் 58 பேர் மரணம்

வவுனியா, ஒக். 26

வவுனியாவில் 2021ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பல்வேறு விபத்து சம்பவங்க ளால் 58 பேர் உயிரிழந்தனர்.

விபத்துகள் தொடர்பில் வவு னியா மாவட்ட பொது மருத் துவமனையிடம் தகவல் அறி யும் சட்டம் மூலமாக கேட்கப் பட்ட நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தரவுகளின் அடிப் படையில் இவ்வருடத்தில் மட்டும் இதுவரை 18 பேர் பலியானதுடன் கடந்த வரு டங்களை விட விபத்துகளால் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அவதா னிக்க கூடியதாகவுள்ளது.

மேலும், கடந்த ஐந்து வரு டங்களில் 18 வயதுக்கு குறைந்த 8 பேர் விபத்துகளால் உயிரிழந் தனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ-10)

# சட்டவிரோத செயல்களை தடுக்க அவசர நடவடிக்கை வேண்டும்

## ரஜீவன் எம்.பி. வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதச் செயல்பாடுகளின் தீவிரத்தைக் குறைக்க அவசர நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சசார் ஆலோசனைக் குழுவுக்கு வேண்டுகோள் விடுத் துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோக பூர்வ முகநூல் தளத்தில் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில், குறிப் பாக யாழ்.மாவட்டத்தில் பல குழுக்கள் தற்போது சட்ட விரோதச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன என்பதை நான் கவனித்துள்ளேன். குறிப்பாக போதைப்பொருள் விற்பனை அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

இந்த போதைப்பொருள் விற்பனையிலிருந்து பெறப் படும் பணம், சமூக விரோதச் செயல்பாடுகளுக்கு பயன்படுத் தப்படுவதுடன், மீற்றர் வட்டி வணிகம், ஆள் கடத்தல், கட் டப்பஞ்சாயத்து, குழுச் சண் டைகள் போன்ற குற்றச் செயல் களிலும் சிலர் ஈடுபட்டு வரு கின்றனர்.

இச்செயல்பாடுகள் தற் போது பொது இடங்களிலும் சந்தைகளிலும் பரவலாக இடம் பெறுவதால் அப்பாவி மக்க ளின் பாதுகாப்பு ஆபத்துக்குள் ளாகியுள்ளது. இதன் விளை வாக பாலியல் வன்முறை, கொலைகள், தற்கொலைகள் மற்றும் பல உளவியல் பாதிப்பு கள் அதிகரித்து வருகின்றன.

எனவே, இவ்வாறான குற்றச் செயல்பாடுகளை தடுக்க உட னடி விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப் பாக, இக்குழுக்களுடன் தொடர்புடையவர்களின் வங்கிக் கணக்குகள், சொத்துக கள் மற்றும் வருமான மூலங் களை விசேடமாக கண்கா ணித்து, சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்ட பணம் அரசு டைமையாக்கப்பட வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

இந்த நடவடிக்கைகள் வடக்கு மக்களின் பாதுகாப் பையும் சமூக நலனையும் உறுதிப்படுத்தும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன். இது இளைஞர்களை போதைப் பொருள் பழக்கத்திலிருந்து காப்பாற்றவும், சமூகத்தில் அமைதி மற்றும் நம்பிக்கையை நிலைநாட்டவும் உதவும் என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (எ-05)

# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு குளிரூட்டப்பட்ட அறைகளை அமைத்துத் தருக

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 26

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு மேலதிக மரக்கறிகளை சேமித்து வைக் கக்கூடிய வகையில் குளிரூட் டப்பட்ட அறைகளை அமைத் துத்தருமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ப. சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது அமைச்சுக்குள் பொரு ளாதார மத்திய நிலையம் உட் படாது எனினும், விவசாயிகள் நன்மை கருதி 2026 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுப் பதாக விவசாயம், காணி மற் றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித் தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற விவசாயம், காணி மற்றும் நீர்ப் பாசன அமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே சத் தியலிங்கம் எம். பி. இந்தக்



கோரிக்கையை முன்வைத்திருந் தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு பல் வேறு பகுதிகளிலிருந்தும் தின மும் தமது மரக்கறி உற்பத்திப் பொருட்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வரு கின்றனர். பொருளாதார மத் திய நிலையத்தில் மரக்கறிகளை வாங்கும் மொத்த வியாபாரிகள் அவற்றை பல இடங்களில் இருந்தும் கொள்வனவு செய்ய வரும், குறிப்பாக தம்புள் ளையை சேர்ந்த வியாபாரிக ளுக்கு விற்பனை செய்கின்றனர். எவ்வாறிருப்பினும் தினமும் 4000 தொடக்கம் 5000 கிலோ வரையிலான மரக்கறிகள் அன் றைய தினம் விற்பனை செய்யப் பட முடியாத நிலையில் அதனை பாதுகாப்பாக சேமித்து வைக் கக்கூடிய வசதியின்மையால் பழுதடைகின்றன. இதனால் பொருளாதார மத்திய நிலைய மொத்த வியாபாரிகள் அதிக நஷ்டத்தையும் பிரச்னைகளை யும் எதிர்கொள்கின்றனர்.

எனவே, வவுனியா பொரு ளாதார மத்திய நிலையத்தில் தினமும் மிஞ்சுகின்ற மேலதிக மரக்கறிகளை பாதுகாப்பாக சேமித்து வைக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட் டப்பட்ட அறைகளை அமைக் கும் செயல்பாட்டை விவசாய அமைச்சின் 2026ஆம் ஆண்டுக் கான திட்டத்தில் உள்வாங்கி அவற்றை அமைத்துத்தர வேண் டும் என கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச் சர் லால்காந்த, மரக்கறிகளை சேமித்து வைக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட் டப்பட்ட அறைகளை அமைத் துத்தர நிதி ஒதுக்கீடு செய்வ தாக உறுதியளித்தார். (எ-10)

# மாந்தை கிழக்கு பிரதேச சபை அமர்வில் கடும் அமளி துமளி

முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிர தேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் இராசையா நளினி தலைமையில் நடைபெற்றது. இதன் போது, ஆரம்பத்திலிருந்தே கடும் அமளி துமளி நிலவிய நிலையில் சபை உறுப் பினர்கள் சிலர் சபையை புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியைச் சேர்ந்த சத்திய மூர்த்தி சத்தியவரதன் (உபதவிசாளர்), செல்லையா அமிர்தலிங்கம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த வைர முத்து ஜெயரூபன், சிவஞானசுந்தரம் நிக்சன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த நடராசா மகிந்தன் ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.

13 உறுப்பினர்களை கொண்ட இந்தச் சபையின் நேற்று முன்தின அமர்வில் 10 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்த நிலையில், அவர்களில் ஐவர் வெளிநடப்பு செய்ததையடுத்து கோரம் இல்லாத காரணத்தால் சபை கூட்டத்தை நடத்த முடியாது என தவிசாளர் அறிவித்து, கூட்டத்தை 15 நாட்களுக்கு ஒத்திவைத்தார்.

வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

இது 4ஆவது அமர்வு. ஆனால், இதற்கு முன் எடுக்கப்பட்ட தீர்மா னங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

சபை உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகள் திணைக்களங்களுக்கு அனுப்பப்படாததுடன், அவற்றை செயல்படுத்துவதிலும் தவிசாளர் அலட்சியம் காட்டி வருகிறார்.

அடுத்த 14 நாட்களுக்குள் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அனுப்பினால் அடுத்த அமர்வில் கலந்துகொள்வோம் என தெரிவித்தனர்.

உப தவிசாளருக்கு எந்தவித பொறுப் புகளும் வழங்கப்படவில்லை. தவிசாளர் தன்னிச்சையாக அனைத்து பொறுப்புக் களையும் தன்னகத்தே வைத்துள்ளார். அபிவிருத்தி செயல்பாடு கள் முன்னேறாத நிலை நிலவுகிறது.

எந்தவித கட்சி பேதமின்றி அனை வரும் ஒன்றிணைந்து மக்களுக்கான அபி விருத்தி செயல்பாடுகளை முன்னெடுக்க முயன்றவேளை மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர், தவிசாளரையும் இணைத்து தன்னிச்சையாக செயல்பட்டு எந்தவொரு அபிவிருத்தி வேலைகளை யும் செய்ய விடாது புறக்கணித்து வரு கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினர்.

கடந்த கூட்டத்தில் 40, 500 ரூபாய் சபையில் அனுமதி கோரப்பட்ட தொகை. இந்த அமர்வு அறிக்கையில் ஓர் இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இது மோசடியை உணர்த்துகிறது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை மறுசீரமைப்பால் சட்ட சிக்கல் எதுவும் ஏற்படாது

கொழும்பு, ஒக். 26

அமைச்சரவையை மறுசீரமைப்பதால் குறைநிரப்பு பிரேரணையின் மொத்த தொகையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது. கடந்த கால எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றலாம். அமைச்சரவை மறு சீரமைப்பால் குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றுவதில் எவ்வித சட்ட சிக்கலும் ஏற்படாது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

குறைநிரப்பு பிரேரணை மற்றும் அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் முன்வைத்த விடயங்கள் குறித்து நிதி



யமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

பாராளுமன்றத்தில் குறைநிரப்பு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டால் எவ்வாறு செயல்படுவது என்பது தொடர்பில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

2024 ஆம் ஆண்டு நிதியாண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை 2023.09.27 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு, பிரேரணை 2023.10.05 ஆம் திகதியன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் 2023.10.23 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மறுசீரமைத்தார். அமைச்சரவையை மறுசீரமைப்பதால் குறைநிரப்பு பிரேரணையின் மொத்த தொகையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

கடந்த கால எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றலாம். அமைச்சரவை மறுசீரமைப்பால் குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றுவதில் எவ்வித சட்ட சிக்கலும் ஏற்படாது - என்றார். (எ)

# ரஜமஹா விகாரையில் புத்தர் சிலை திருட்டு!

கொழும்பு, ஒக். 26

வரலாற்று சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விகாரையின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க புத்தர் சிலை ஒன்று தி டப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 40 கிலோ எடையுடைய பெறுமதிமிக்க புத்தர் சிலை ஒன்றே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி பெட்டியை உடைத்து உள்ளே இருந்த பெறுமதிமிக்க புத்தர் சிலையை திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மஹியங்கனை ரஜமஹா விகாரையில் உள்ள சிசிரிவி கமராவில், இனந்தெரியாத இரண்டு நபர்கள் நள்ளிரவு 01.00 மணியளவில் அருங்காட்சியகத்துக்குள் நுழையும் காட்சிகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர். (எ)

# நாட்டிலுள்ள பல மருத்துவமனைகளில் சேவைகளை வழங்குவதில் நெருக்கடி

கொழும்பு, ஒக். 26

நாட்டில் உள்ள பல அரச மருத்துவமனைகளின் கட்டமைப்பில் ஒரு சில அடிப்படை வசதிகள் இன்றளவும் முறையாக பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இதனால், மருத்துவமனைகளுக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு சிகிச்சை-சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதில் கடும் நெருக்கடி உருவாகியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் விடுக்கப்பட்ட விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

உலகின் மிகவும் வளர்ந்த நாடுகளுக்கு அடுத்தபடியாக, பொதுமக்களுக்கு சிறந்த சுகாதார சேவை இலங்கையில் வழங்கப்படுவதாக, இந்த நாட்டின் இலவச சுகாதார சேவை உலக சுகாதார ஸ்தாபனத்தால் பாராட்டப்பட்டுள்ளது.

எனினும், அரச மருத்துவமனை கட்டமைப்பில் ஒரு சில அடிப்படை வசதிகள் இன்றளவும் முறையாக பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது. இதனால் நோயாளர்களுக்கு சிகிச்சை - சேவை களை தொடர்ச்சி யாக வழங்குவதில் கடும் நெருக்கடி உருவாகியுள்ளது.

GMOA
Government Medical Officers' Association

மருத்துவர்களின் சேவைக்கேற்ற சூழல் இல்லாமையால், பல மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மருத்துவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு நம்பகமான திட்டம் கொண்டுவரப்படாத நிலையில் தொடர்ச்சியாக மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

மருத்துவமனைகளின் சேவைத் தேவைகளுக்கு ஏற்ப மருத்துவர்களை பணியமர்த்துவது பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. அந்த வகையில் சுமார் 10 ஆயிரம் மருத்துவர்களின் இடமாற்றம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

மருத்துவமனை அமைப்புக்குள் நோயாளிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் திருப்திகரமாக இல்லை. அடிப்படை உட்கட்டமைப்பு வசதி, சுகாதார வசதி மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகிய வற்றில் ஏராளமான சிக்கல்கள் உள்ளன.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறை நோயாளிகளுக்கு மட்டுமல்ல, நோயாளி பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஊழியர்களுக்கும் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

எமது மருத்துவ சங்க உறுப்பினர்களிடமிருந்து தொடர்ச்சியாக கிடைக்கப் பெறும் தகவல் மற்றும் புகார்களுக்கமைய, மருத்துவமனையின் அடிப்படை வசதிகளில் உள்ள சிக்கல் மற்றும் குறைபாடுகள் குறித்து கணக்கெடுப்பு நடத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் இலவச சுகாதார சேவையை உருவாக்குவதில் மக்களின் வரிப் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும். காலப்போக்கில் நிலையான திட்டத்தின் மூலம் மருத்துவமனை அமைப்பில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க அரசாங்கமும் பொதுமக்களும் தலையிட வேண்டும் என வலியுறுத்துகிறோம் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# குற்றச்செயல்களுடன் தொடர்பு 5,414 பேர் இதுவரை கைதாகினர்

## பெருமளவு ஆயுதங்கள் பறிமுதல்

கொழும்பு, ஒக். 26

முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் ஜனவரி முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 5,414 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சந்தேகத்தின் பேரில் 129,448 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 56,365 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மொத்தமாக 6,127,138 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்திய 47, 938 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அஜாக்கிரதையாக வாகனம் செலுத்துதல் உள்ளிட்ட வீதிப் போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் 769,933 பேருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் மூலம் ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை 67 ரி- 56 ரக துப்பாக்கிகள், 73 கைத் துப்பாக்கிகள், 50 ரிவோல்வர்கள் மற்றும் 1,907 ஏனைய ஆயுதங்கள் உட்பட மொத்தம் 2,097 ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 22ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,482 கிலோ 820 கிராம் ஹெரோயின், 14, 434 கிலோ 468 கிராம் கஞ்சா, 32 கிலோ 642 கிராம் கொக்கெய்ன், 582 கிலோ 136 கிராம் ஹஷீஸ், 2,542 கிலோ 454 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 3,961,790 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்களுடன் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஒக். 26

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகஹவத்தை பிரதேசத்தில் ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கம்பஹா பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 8 ரி-56 தோட்டாக்களும் 15 பயிற்சி தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 53 வயதுடைய அம்பகஹவத்தை, மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். மேலதிக விசாரணைகளுக்காக இவர் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# பிரித்தானிய பெண்ணின் பணப்பை மீள ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 26

நாரஹேன்பிட்டிய, திம்பிரிகஸ்யாய வீதியில் பிரித்தானிய பிரஜையான சப்ரீனா கமரோன் என்ற பெண் ஒருவரின் காணாமல் போன பணப்பை கண்டு பிடித்து கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பணப்பை திம்பிரிகஸ்யாய வீதியில் விழுந்து கிடந்த நிலையில், பிரதமரின் பாதுகாப்புப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள பெண் பொலிஸ் பரிசோதகர் யமுனா தம்மிகா குமாரி எதிரிசிங்க மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் சமன்மீ ஆகிய அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, பணப்பையின் உரிமையாளரான வெளிநாட்டுப் பெண்ணை பிரதமர் பாதுகாப்புப் பிரிவுக்கு அழைத்து, அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுமித்ர டி சில்வா அந்தப் பணப்பையை அவரிடம் ஒப்படைத்தார்.

அதில் இலங்கை நாணயம் 6,000 ரூபாயும் இலங்கை பெறுமதியில் சுமார் 6 இலட்சம் ரூபாய் யூரோ, அமெரிக்க டொலர், ஸ்டெர்லிங் பவுண்ட் போன்ற வெளிநாட்டு நாணயங்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பஸ்கள் சேவையிலிருந்து விலகும் அபாயம் உள்ளது

கொழும்பு, ஒக். 26

அடுத்த ஆண்டுக்குள் சுமார் 3,000 குறுகிய தூரப் பேருந்துகள் சேவையிலிருந்து விலகும் அபாயம் உள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திட்டமிடப்படாத வாகன இறக்குமதியால் வீதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது.

இந்த நெரிசல் காரணமாக பேருந்துகளின் எரிபொருள் செலவு உயர்வதுடன், ஒரு நாளைக்கு இயக்கப்படும் பயணங்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளது.

இதன் விளைவாக, பேருந்து உரிமையாளர்கள் தொழிலில் இருந்து வெளியேறி வருவதாக தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்க முறைமைகள்மீது எமக்கு நம்பிக்கை இல்லை"

கொழும்பு, ஒக். 26

அரசாங்க முறைமைகள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது, கடந்த முறை கேட்கப்பட்ட கேள்விக்கு ஐ.நா. மனித உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டுக்கான வினாவின் பதிலை பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கியிருந்தார்.

அதில், உள்நாட்டு பொறிமுறை மாத்திரமே அனுமதிக்கப்படும் சர்வதேச பொறிமுறைக்கு அனுமதியில்லை. இதனால் நாடு பிளவுபடும் எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் பிரதமருக்கு பதிலளித்த சாணக்கியன் எம். பி.

பிரதமர் அளித்த பதிலுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், பிரதமரே, உங்களின் ஆட்சிக் காலத்தின் சுமார் 20 சதவீதம் ஏற்கனவே முடிந்துவிட்டது என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதாவது, ஒரு வருடம் கடந்துவிட்டது. நீங்கள் இந்த சபைக்கு கூறுவது என்னவெனில் அரசு உள்நாட்டு முறைமையைக் கொண்டு செல்ல விரும்புகிறது, சர்வதேச தலையீடுகளுக்கு அனுமதியில்லை என்கிறீர்கள், ஏனெனில் அது சமூகங்களைப் பிளக்கும் என்றும் நாட்டில் மேலும் பிரச்னைகளை உருவாக்கும் என்றும் கூறுகிறீர்கள்.

அந்த கருத்துடன் நான் ஒப்புக்கொள்வதில்லை. உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் நம்பும், நம்பிக்கையுடன் ஈடுபடும் ஒரு செயல்முறை இருக்க வேண்டும். ஆனால், நீங்கள் அதை நிராகரித்துள்ளீர்கள், மறுத்துள்ளீர்கள். பாதிக்கப்பட்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினரான, எனது ஏமாற்றத்தை வெளிப்படுத்துகிறேன். இந்த அரசு குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட மக்களின் குரலைக் கேட்டு சர்வதேச விசாரணைக்கு ஒப்புக்கொள்வார்கள் என நாங்கள் நம்பியிருந்தோம். எனினும், எனது நிலைப்பாடு தெளிவாகவே இருக்கிறது. நாங்கள் உங்கள் உள்நாட்டு முறைமையை நிராகரிக்கிறோம் மேலும், பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் சர்வதேச விசாரணையையே கோருகிறோம். ஏனெனில் இலங்கையின் அரசாங்க முறைமைகள் மீதான நம்பிக்கை எங்களுக் கில்லை. இது போர் முடிந்த 16 ஆண்டுகளாக எங்களின் நிலைப்பாடாகவே உள்ளது - என்றார். (எ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழை

## 19.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு



மட்டக்களப்பு, ஒக். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையிலிருந்து பலத்த காற்றுடன் மழை பெய்து வருகின்றது. இதனிடையே மின்சாரமும் இடையிடையே தடைப்பட்டு வருகின்றன. பலத்த காற்றுடன் மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, காத்தான்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் பரவலாக மழை பெய்து வருகின்றது.

இந்த நிலையில், மாலை வேளையில் உகைப்பு மழை பெய்து வருகின்றது என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ். ஸியாத் தெரிவித்தார்.

அத்தோடு, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை 19.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபை தவிசாளர் பாதுகாப்பு கோரிய கடிதம் கசிவு

கொழும்பு, ஒக். 26

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் பாதுகாப்பு கோரியதாக ஊடகங்களில் பரவி வரும் கடிதம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர, கடந்த 22ஆம் திகதி பிரதேச சபையின் உத்தியோகபூர்வ அறையில் இனந்தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

லசந்த விக்ரமசேகரவுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கக் கோரி, பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதம், அவரது உயிருக்கு அச்சுறுத்தல்கள் வந்துள்ளதாகக் கூறி, தற்போது முக்கிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

லசந்த விக்ரமசேகர, பாதுகாப்பு வழங்குமாறு கோரி கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதியன்று பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், அந்தக் கடிதம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கடந்த செப்ரெம்பர் 12ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய, தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மேற்படி கடிதத்தை மாத்தறை - அம்பாந்தோட்டை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி, மேலதிக நடவடிக்கை எடுக்குமாறும், தலைமையக பொலிஸ் பரிசோதகர் வெலிகம மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மிதிகம ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# களு கங்கையில் நீர்மட்டம் உயர்வு : இரத்தினபுரிக்கு வெள்ள அபாயம்

கொழும்பு, ஒக். 26

களு கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதன் காரணமாக இரத்தினபுரி மற்றும் மில்லகந்த பகுதிகளை அண்டிய மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

களு கங்கையின் நீர்மட்டம் தற்போது அவதானம் செலுத்த வேண்டிய நிலைமையை எட்டியுள்ளது. இதனால், களு கங்கையை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி மற்றும் மில்லகந்த ஆகிய தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள், நிலைமையைக் கூர்ந்து அவதானிப்பதுடன், அவசர கால நடவடிக்கைகளுக்குத் தயாராகுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ள அபாயம் உள்ள இந்த இரண்டு பகுதிகளையும் அண்மித்த மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழை தொடரும் பட்சத்தில் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதால் பொது மக்கள் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 'ரஜரட்ட ரெஜினி' ரயிலில் தீ விபத்து

அநுராதபுரம், ஒக். 26

அநுராதபுரத்திலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த 'ரஜரட்ட ரெஜினி' ரயிலின் இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தீ விபத்து நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்றது.

இயந்திரத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக ரயில் சேவை இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக தாமதமானதுடன் குறித்த ரயில் மீண்டும் அநுராதபுர ரயில் நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

அநுராதபுர ரயில் நிலையத்திலிருந்து குறித்த ரயில் மீண்டும் பயணத்தைத் தொடங்குவதற்கு மாற்று இயந்திரம் இணைக்கப்பட்டது.

ரயில் இயந்திரத்தில் தீ எதனால் ஏற்பட்டது என்பதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ)

# என்னை படுகொலை செய்ய ஒரு தரப்பினர் தீவிர முயற்சி

## இனியும் தாமதிக்காது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் - ஜகத் விதான

கொழும்பு,ஒக். 26

என்னை சுட்டுப் படுகொலை செய்வதற்கு ஒரு தரப்பினர் முயற்சிப்பதாக கிடைத்துள்ள புலனாய்வு தகவலை பொலிஸ்மா அதிபர் களுத்துறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியுள்ளார். எனவே, இனியும் தாமதிக்காதீர்கள் எனது பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், வீட்டிலிருந்து வெளியேறும் போது என்னை சுட்டுக் கொல்வதற்கு ஒரு தரப்பினர் முயற்சிப்பதாக புலனாய்வு தகவல் கிடைத்திருப்பதாக குறிப்பிட்டு பொலிஸ்மா அதிபர் களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஊடாக அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

என்னைப் படுகொலை செய்ய முயற்சிக்கும் நபரின் பெயரையும் பொலிஸ்மா அதிபர் குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தாமதிக்காமல் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். பொலிஸ்மா அதிபர் களுத்துறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். எனது பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தாமதிக்காதீர்கள் - என்றார்.(எ)

# மழையால் மலையக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஹற்றன், ஒக். 26

நாட்டில் பல மாவட்டங்களில் நிலவும் சீரற்ற வானிலையை தொடர்ந்து மத்திய மலைநாட்டில் பல பகுதிகளில் பலத்த காற்றுடன் தொடர் மழை பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் நுவரெலியா மாவட்டத்தின் பல இடங்களில் மண்சரிவு அபாயம் காணப்படுவதாகவும் இதனால் மக்கள் கடும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர் மழையுடன் அடிக்கடி பனிமூட்டம் காணப்படுவதனால் வளைவுகள் நிறைந்த மலையக வீதிகளை பயன்படுத்து சாரதிகள் மிகவும் அவதானமாக தமக்குரிய பக்கத்தில் வாகனத்தின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு மெதுவாக செலுத்துவதன் மூலம் வீதி விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளலாம் என போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கலகல, பிட்டவல, கினகத்தேனை, கடவல, தியகல, வட்டவளை ஹற்றன் உள்ளிட்ட பகுதியிலும் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டக்கலை, சென்கிளயார், தலவாக்கலை, ரதல்ல, நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் அடிக்கடி வீதியில் பனி மூட்டம் காணப்படுகின்றன.

அத்தோடு குறித்த வீதியில் பல இடங்களில் மண்மேடுகள் சரிந்து வீழ்ந்ததுடன், மண்சரிவு அபாயமும் காணப்படுகின்றது.

எனவே, இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் என பொலிஸார் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மத்திய மலை நாட்டின் நீரேந்தும் பிரதேசங்களுக்கு அதிக மழை வீழ்ச்சி கிடைத்து வருவதனால் நீர்வீழ்ச்சிகளினதும், நீர்த்தேக்கங்களினதும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதனால் விமலசுரேந்திர, காசல்ரி, லக்ஷ்பான, நவலக்ஸபான, கெனியோன், மவுசாக்கலை, மேல்கொத்மலை, பொல்பிட்டிய உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் உயர்ந்து வருகின்றன.

மழைவீழ்ச்சி அதிகரித்ததால் எவ்வேளையிலும் நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்படலாம் என்பதனால் நீர்த்தேக்கத்துக்கு கீழ் ஆற்றுக்கு சமீபமாக இருக்கும் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பாக உள்ள பொறியியலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.10.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேச விசாரணை ஏன் கோரப்படுகின்றது?

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமில்லை, அதற்கான ஏற்பாடுகளை உள்ளக பொறிமுறையின் ஊடாகவே முன்னெடுக்கமுடியும் என்று பிரதமர் ஹரிணி அமசூரிய தெரிவித்திருக்கின்றார். சர்வதேச விசாரணைதான் வேண்டுமென்று பாதிக்கப்பட்ட தரப்புகள் கோருகின்றன. ஆனால், அவ்வாறானதொரு விசாரணையை முன்னெடுக்க முடியாதென்று அரசாங்கம் கூறுகின்றது. தேசிய மக்கள் சக்தி கூறும் விடயம், இதற்கு முன்னிருந்த ஆட்சியாளர்களும் முன்னெடுத்த நிலைப்பாடுதான்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் கடந்துவிட்டது. இந்தக் காலத்தில் உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் எவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன? சர்வதேச விசாரணை வேண்டாம் என்று கூறுவதில் காண்பிக்கப்படும் உறுதிப்பாட்டை உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதில் எந்தவோர் ஆட்சியாளரும் இதுவரையில் உறுதியான தலைமைத்துவத்தை நிரூபிக்கவில்லை. இந்தப் பின்னணியில் பாதிக்கப்பட்ட மக்கள், ஆட்சியாளர்கள் மீது எந்த அடிப்படையில் நம்பிக்கை வைக்கமுடியும்?

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்டது. இந்தக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய எந்தவொரு நகர்வும் ஆட்சியாளர்கள் பக்கத்திலிருந்து முன்னெடுக்கப்படவில்லை. இந்தப் பின்புலத்தில்தான் சர்வதேச விசாரணை என்னும் கோரிக்கை பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் கவர்ச்சிகரமான ஒன்றாக இருக்கின்றது. பதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றால் அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து ஆக்கபூர்வமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து சில விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நம்பிக்கையுடன் சில விடயங்களை முன்னெடுத்திருந்து. முதல் முதலாக உள்நாட்டு பொறிமுறை என்னுமடிப்படையில் சில நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட தரப்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் விமர்சனங்களை முன்வைத்த போதிலும் கூட, தமிழ் மக்களின் பெரும்பாண்மையான தரப்புக்கள் அரசாங்கத்தின் முயற்சியை ஆதரித்தன. முதல் முதலாக புலம்பெயர் அமைப்புக்களுடனும் அரசாங்கம் உரையாடியது. ஆனால், இந்த நகர்வுகள் எதிர்பார்த்தவாறு வெற்றியை நோக்கி நகரவில்லை. ரணில் - மைத்திரி முரண்பாடுகள் அனைத்து வாய்ப்புக்களுக்குமான, அனைத்து கதவுகளையும் இறுக்கி மூடியது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தேசிய மக்கள் சக்தி உள்நாட்டு பொறிமுறையில் உண்மையிலேயே உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தால், அதனை முன்கொண்டு செல்வதற்கான முற்றிலும் சாதகமான சூழல் காணப்படுகின்றது. ரணில் - மைத்திரி ஆட்சியில் ஏற்பட்டவாறான எந்தவோர் உள் சிக்கல்களும் தேசிய மக்கள் சக்தியில் இல்லை. மிகவும் அரிதான பெரும்பாண்மை பலத்தை அரசாங்கம் கொண்டிருக்கின்றது.

சட்டங்களை இயற்றுவதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதிலும் வரலாற்றில் அரிதான வாய்ப்பை அரசாங்கம் கொண்டிக்கின்றது. இப்போது தேவையான விடயம் ஒன்றே ஒன்றுதான் - அதாவது, அரசாங்கம் கூறிவரும் விடயங்களை உறுதியாக முன்னெப்பதற்கான அரசியல் தற்துணிபு இருக்கவேண்டும். தென்னிலங்கை ஆட்சியாளர்களின் அடிப்படையான பிரச்னையே இங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றது.

# வலய கல்வி அலுவலகங்களில் அனுமதி அட்டைகள் பெறலாம்

## உயர்தர மாணவர்களுக்கு அறிவித்தல்

கொழும்பு, ஒக். 26

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து அதிபர்களும் தங்கள் பாடசாலைக்குரிய அனுமதி அட்டைகளை அந்தந்த வலயக் கல்வி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.



க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம், அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சாத்திகளின் பெயர்கள், பாடங்கள் தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால், அத்தகைய மாற்றங்களை உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் செய்யலாம் என்றும் ஆணையாளர் நாயகம் தெரவித்துள்ளார்.

அனைத்து திருத்தங்களும் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட வேண்டும் எனவும் பரீட்சாத்திகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை, நாடு முழுவதும் உள்ள 2,362 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சை டிசெம்பர் 6 ஆம் திகதி 1,665 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

(எ)

# நாட்டில் குறைவடைந்துவரும் திருமணம், பிறப்பு வீதங்கள்!

கொழும்பு, ஒக். 26

2024 ஆம் ஆண்டில் இலங்கையில் திருமணங்கள் மற்றும் பிறப்புக வீதம் கணிசமாகக் குறைந்துள்ளதாக மக்கள்தொகை மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 1 இலட்சத்து 39ஆயிரத்து 290 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 வீத குறைவாகும் என தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டு, பொருளாதார நெருக்கடியின் காலத்தில், நாடு முழுவதும் 1இலட்சத்து 71ஆயிரத்து 140 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

முன்னதாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ புள்ளி விவர தரவுகளின்படி பிறப்புகளிலும் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 20ஆயிரத்து 761 பிறப்புகள் பதிவாகியுள்ளன.

இது 2020 ஆம் ஆண்டில் பதிவான 3 இலட்சத்து ஆயிரத்து 706 பிறப்புகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயரக்கூடும்: நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 26

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக சுமார் 15 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் ஜெனரல் எல்.எஸ். சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

இராஜாங்கனை, சியம்பலங்கமுவ, தெதுரு ஓயா நீர்த்தேக்கம், பதலகொட, ஹத்வதுன்ஓயா மற்றும் யோதவாவி நீர்த்தேக்கங்கள் உள்ளிட்ட பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக, நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேலும் உயரக்கூடும் எனவும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயக்கம் வேண்டாம்!

பெ.சுப்ரமணியன்



உலக மக்களில் அதிகப்படியானோருக்கு பயம் என்பது எது என்றால் பலருக்கு முன்பாகப் பேசுவதுதான். இத்தகைய பயம் மாணவ, மாணவிகளிடையே மட்டுமின்றி பல்வேறு பணிகளில் இருப்பவர்களிடமும் இருக்கிறது.

பலருக்கு முன்பு பேசத் தயங்கும் மாணவ, மாணவிகள்தான் வாய்மொழித் தேர்வு, தனியார் அல்லது அரசுப் பணிக்கான நேர்முகத் தேர்வு போன்றவற்றிலும் பேசத் தயங்குகின்றனர்.

வார்த்தைகள் வராதது, நன்றாகத் தெரிந்த நிகழ்வுகள் மறந்து போதல், தொடர்ச்சியாகப் பேச முடியாதது போன்றவையெல்லாம் பதற்றத்தின் வெளிப்பாடுகள்தான். அத்தகைய சூழ்நிலையிலிருந்து வெளியே வந்ததும் அனைத்து நிகழ்வுகளும் தெளிவாகத் தெரியும், பேச்சு கோர்வையாக வரும்.

அனைத்து தரப்பினரிடமும் இதுபோன்ற பிரச்னை இருந்து வருகிறது. இணைபிரியா தம்பதியர், நண்பர்கள், தோழிகள் என்று கூறுபவர்களை தனித்தனியே சந்தித்துப் பேசினால் தங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்துவர். சமூகத்தில் இவ்வகையானோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சிக்கலான சூழல்கள், பிரச்னைகள் என்பது பெரும்பாலானோருக்கு வரக்கூடியவைதான். ஆனால், இன்றைய சூழலில் மட்டும் பிரச்னைக்கு உரியவர்கள் இப்படி ஏங்குவது ஏன்? சிறிய பிரச்னைகள்கூட ஏன் சிக்கலாக்கப்படுகின்றன என்றெல்லாம் கேள்விகள் எழலாம். இதற்கு மனம் விட்டுப் பேசாதது உள்ளிட்ட பல காரணங்கள் இருந்தாலும், குடும்ப அமைப்பு சிதறுண்டு போனதுதான் முக்கியக் காரணமாகும்.

முன்பெல்லாம் நம் குடும்ப அமைப்பில் அப்பா, அம்மாவைக் கடந்து சித்தப்பாக்களும், சித்திகளும், மாமாக்களும், அத்தைகளும் ஒரே வீட்டில் இல்லையென்றாலும் அருகருகே இருந்தனர். அதனால், ஆலோசனைகள் தேவைப்படும் அளவுக்கு பிரச்னைகள் எழவில்லை. ஆலோசனைகள், அறிவுரைகள் வாயிலாக பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது.

கடந்த காலங்களில் தம்பதியிடையே பிரச்னை என்றாலும் பேசித் தீர்வு காணப்பட்டது. அதனால்தான், அப்போது மணமுறிவு என்பது அரிதாக இருந்தது. இன்று கணவன்-மனைவி, குழந்தைகள் என நான்கு பேர் மட்டுமே வாழும் வீட்டில்கூட மனம்விட்டுப் பேசாததால்தான் மணமுறிவு என்பது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

மனதில் தோன்றும் எண்ணங்களை, கருத்துகளை ஏதாவதொரு உறவிடம் கூறித் தீர்வு காணும் நிலை அன்று இருந்தது. ஆனால், இன்று இவ்வகையான உறவுகள் திசைக்கு ஒன்றாக சிதறிப் போனதுடன் குடும்பம் என்பது இரண்டும், மூன்றுமாகச் சுருங்கிப் போய்விட்டன. பிரச்னையே அவர்களுக்குள் எனும்போது யாரிடம் சென்று பேசுவார்கள்?.

வேலை, கல்வி, வாழ்க்கைத்தரம் போன்றவற்றால் உறவுகள் பல திசைகளிலும் இருக்கின்றனர். இவ்வகையான உறவுகள் அவ்வப்போதோ அல்லது பண்டிகைகள், திருவிழாக்கள் காலத்தின்போதோ ஒன்று கூடினால் ஒருவரையொருவர் அறிந்து கொள்வர். ஆனால், திருமணம் போன்ற நிகழ்வுகளின்போது மட்டுமே சந்தித்துக் கொள்கின்றனர்.

இதனால், உறவுகள் வட்டம் மட்டுமின்றி நட்புகளும் குறைந்து வருகின்றன என்பதுதான் உண்மை. ஆனால், சிக்கல்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. அதனால், நமக்குத் தேவையில்லாத, நன்மை தராத, கசப்பான உணர்வுகள் என அனைத்தையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. இவற்றை யாராவது ஒருவரிடம் மனம் விட்டுப் பேசினால் அந்த எண்ணங்கள் மறைந்து போவதுடன் தீர்வும் கிடைக்கும். அவ்வாறில்லாமல் இவற்றையெல்லாம் மனதுக்குள்ளேயே தேக்கி வைப்பதால் அது நம்மை காலங்காலமாக ஆட்டிப்படைக்கும் சிக்கலாக உருமாறி விடுகிறது.

அவமானம், துக்கம், பொறாமை, துரோகம், வஞ்சம், ஏமாற்றம், ஆற்றாமை, கோபம், குற்ற உணர்வு என ஏதோ ஒன்றை எவரிடமும் சொல்லாமல் மனதுக்குள்ளேயே வைப்பதால் அது நம் செயல்பாடுகளை, நடத்தையை மாற்றுவதுடன் உடல் உறுதியையும் கெடுத்து விடுகிறது.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் இணையவழியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதில் பங்கேற்கும் சிறப்பு விருந்தினர்களுடன் எளியோரும் பங்கேற்றுப் பேசுகின்றனர். இத்தகைய வாய்ப்புகள் இன்றைய தலைமுறையினருக்கு ஏராளமாக உள்ளன. அதற்கேற்ப நாம்தான் மாற்றம் காண வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளிலும், மாவட்ட, மாநில அளவிலும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் பங்கேற்பாளர்களாகவோ, பார்வையாளர்களாகவோ கலந்து கொள்ளும்போது கூச்ச சுபாவமின்றி பேசும் மனப்பாங்கு அதிகரிக்கும்.

தற்போதைய சூழலில் பணிச்சூழல் முற்றிலும் மாறிவிட்டது. புதிய இயந்திரங்களின் வரவால் புதிய புதிய பிரச்னைகளும் வேர்விட்டு வருகின்றன. அந்தப் பிரச்னைகளுக்கு எளிய, சிறந்த தீர்வை வழங்குபவர்களையே நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. எனவே, எந்தவித துறை சார்ந்த பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் திறன் நம்மிடம் காணப்படுவது கூடுதல் பலமாக அமையும்.

எந்தவொரு வேலை செய்வதற்கும், தொழிலை நடத்துவதற்கும் பல்வேறு திறன்கள் இருந்தால்தான் வெற்றிக்கான வாய்ப்புகள் வெகு எளிதில் வாய்க்கக்கூடும் என மனித வள திறன்கள் குறித்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பள்ளி மற்றும் கல்லூரிக் காலத்தில் கற்றுக் கொள்வதைத் தவிர தலைமைப் பண்பு, பொறுப்பெற்கும் பண்பு, மொழி ஆளுமை போன்றவற்றோடு பேச்சுத் திறனும் முக்கியம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

தகுதியானவை தப்பிப் பிழைக்கும் என்பது சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டில் உள்ள இயற்கைத் தேர்வு என்ற கருத்தின் ஒரு பகுதியாகும். இது பரிணாமக் கோட்பாட்டுக்கு மட்டுமின்றி இன்றைய பட்டதாரி இளைய தலைமுறைக்கும் பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ●

# இந்தவார ராசிபலன் 26.10.2025 - 01.11.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 09
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்த பந்தங்களிடையே ஒற்றுமை மேலோங்கும். செய்தொழில், வியாபாரம் நன்றாக நடந்து இலாபம் பொங்கும். கேளிக்கை மற்றும் ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டுமே வாழ்க்கையில் முன்னேற்றத்தை அளிக்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனமகிழ்ச்சி நிலவும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவும் உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கலாம். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வியாபார நிமித்தமான தொலைதூரப் பயணாங் களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி அறிவுச் சுடரொளி வீசும். அரசுப்பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம்

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை காண்பீர்கள். மாணவர்களுக்குக் கவனச் சிதறல்கள் காரணமாகப் படிப்பில் ஆர்வம் குறையலாம். எனவே, ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலமாக நன்மைகள் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சனைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம். சந்ததி விருத்தி ஏற்படலாம். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுதல் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். உத்தியோகத்தில் உயர்வுகள் ஏற்படும். தொலைதூரச் செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் சில நேரங்களில் ஏமாற்றத்தைத் தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய்ப் பெருக்கமும் ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகளால் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர் பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதினால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தெய்வப் பிரார்த்தனையால் வேண்டியது நிறைவேறும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்ப டும். எதிர்பாராத தனவரவும் உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கலாம். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடையும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உடன்பிறப்புக்களிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர்பதவிகள் கிடைக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச்செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புக்கள், தேர்ச்சி உண்டாகும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டினையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்ப டும். சம்பாதித்த பணத்தைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலமாக சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திர பாக்கியம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மாகாணசபை தேர்தல்கள்: தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் அண்மைக்காலமாக தீவிரமடையும் கோரிக்கைகள்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

மாகாணசபை தேர்தல்களை அடுத்த வருடம் நடத்துவது குறித்து அரசாங்கத் தலைவர்கள் அடிக்கடி செய்யும் அறிவிப்புகள் இன்னமும் கூட நம்பிக்கை தருபவையாக இல்லை என்ற போதிலும், தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வெவ்வேறு காரணங்களுக்காக அண்மைய நாட்களாக தீவிரமடையத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த வருடத்தைய பாராளுமன்ற தேர்தலுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டதை அடுத்து அரசாங்கம் மக்கள் மத்தியில் ஆதரவை இழக்கத் தொடங்கிவிட்டதாக நம்பும் தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் அடுத்து நடைபெறக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி கடுமையான பின்ன டைவை காணும் என்று எதிர்பார்க்கின்றன. அதனால் அவை இந்த வருடத்துக்குள் ளேயே மாகாணசபை தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வரு கின்றன. சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் துணிச்சல் இருந்தால் மாகாணசபை தேர் தலை நடத்திக்காட்டுங்கள் என்று அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் இந்த கோரிக்கைக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அதாவது அண்மைய எதிர்காலத் தில் மத்தியில் ஆட்சிக்கு வருவது சாத்தியமில்லை என்பதால் ஆட்சிமுறையின் அடுத்த அடுக்கான மாகாண சபை களில் நிருவாகத்தைக் கைப்பற்ற வேண்டியது அல்லது கணிசமான ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டியது எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை ஒரு அரசியல் அவசியமாக இருக்கிறது. அல்லாவிட்டால், ஏற்கெனவே கடுமையாகப் பலவீனப்பட்டி ருக்கும் கட்சிக் கட்டமைப்புக்களை பேணிப்பாதுகாப் பது பெரும் சவாலாக அமைந்துவி டும். ஏதோ ஒரு மட்டத்திலாவது அதிகாரப் பதவிகளில் இருக்காவிட்டால் அரசியல்வாதிகள் தங்கள் கட்சிகளுக்கு தொடர்ந்து விசுவாசமாக இருப்பார்கள் என்று எதிர் பார்க்கவும் முடியாது.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்று அவை முன்வைக்கும் கோரிக்கைக்கும் அதிகாரப்பகிர்வுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் வாக்குறுதியளித்தார்கள். ஆனால், தற்போது அவர்கள் அதைப் பற்றி பேசாமல் வெறுமனே மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு தங்களது அரசியல் நலன்களுக்காக மாத்திரமே கோருகிறார்கள்.

ஆனால், வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தேர்தல் கோரிக்கை வேறுபட்ட அடிப்படையைக் கொண்டது. மாகாண ஆட்சிமுறையை பாதுகாக்க வேண்டும் என்ற தீவிர அக்கறை ஓரிரு கட்சிகளை தவிர, பெரும்பாலான தமிழ்க் கட்சிகளுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க ஜனாதிபதியாக பதவிக்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில், அவர் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண்பது தொடர்பில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதிகள் மீது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டிய இலங்கை தமிழரசு கட்சி அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கால அவகாசம் கேட்டு கடிதம் அனுப்பியிருந்தது. ஜனாதிபதி தமிழரசு கட்சியினரை அழைத்துப் பேசுவார் என்று இராமலிங்கம் சந்திரசேகர் போன்ற அமைச்சர்கள் ஊடகங்களிடம் கூறினார்களே தவிர, ஜனாதிபதியிடமிருந்து பதில் எதுவும் வந்ததாக இல்லை.

அதேவேளை, இலங்கை அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இருக்கின்ற ஒரேயொரு ஏற்பாடான 13 வது திருத்தத்தையும் மாகாண ஆட்சி முறையையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) வடக்கு, கிழக்கில் அண்மைக்காலமாக கருத்தரங்குகளை நடத்திவருகிறது.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முதலும் கடைசியுமான முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாளும் இந்தியாவில் இருந்து வந்து மாகாண ஆட்சிமுறையை பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் விளக்கப்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் பல்கலைக்கழக சமூகத்தினர் உட்பட சிவில் சமூகத்தின் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்திவருகிறார்.




**மாகாணசபை முறையை வலியுறுத்துவது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் தரத்தைக் குறைத்துவிடும் என்று ஒரு கருத்தை சிலர் முன்வைக்கிறார்கள். கற்பனையில் இருக்கும் தீர்வின் தரம் குறைந்துவிடும் என்பது உண்மையே.**

இவ்வாறாக, நீண்டகால அலட்சியத்துக்கு பிறகு மாகாணசபை தேர்தல்கள் குறித்து தமிழ் அரசியல் சமுதாயத்தின் மத்தியில் ஒருவித அக்கறை ஏற்பட்டிருப்பது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியதாகும்.

இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து மாகாண சபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டு 38 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், அது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மை. அந்தக் காலப்பகுதியில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் வெறுமனே மாகாணசபை தேர்தல்களை நடத்தினவே தவிர, மாகாணசபைகளை பயனுறுதியுறுதியுடைய முறையில் இயங்க வைப்பதில் அக்கறை காட்டவில்லை. பதிலாக 13 வது திருத்தம் முறையாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதை சகல அரசாங்கங்களும் உறுதிசெய்தன.

அது மாத்திரமல்ல, கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் மத்திய அரசாங்கங்கள் மாகாண சபைகளுக்குரிய பெருவாரியான அதிகாரங்களை பல்வேறு சட்டவாக்கங்கள் மூலமாக அபகரித்துவிட்டன. 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர, இந்தியாவினாலும் கூட எதையும் செய்ய முடியவில்லை. தொடர்ந்தும் அத்தகைய வேண்டுகோளை புதுடில்லி விடுக்குமே தவிர, கொழும்புக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடியதாக இனப்பிரச்னை விவகாரத்தில் எந்தவிதமான உறுதியான நடவடிக்கையையும் எடுக்கும் என்று தற்போதைய புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் எதிர்பார்க்க முடியாது.

உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று மாகாண சபை தேர்தல்களையும் கலப்பு முறையில் நடத்துவதற்கு எட்டு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் விளைவான எல்லைநிர்ணய சர்ச்சையையடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கின்றன. எல்லை நிர்ணயச் செயன்முறையை கடந்து தேர்தல்களை தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயாராயில்லை. அந்த நோக்கத் திற்காக தனிநபர் பிரேரணை என்ற வடிவில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுவந்த சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு கூட ஒத்துழைக்கவும் அரசாங்கம் தயாராயில்லை.

எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவடைந்தவுடன் அடுத்த வருட முற்பகுதியில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று பிரதமர் உட்பட அரசாங்க அமைச்சர்களில் சிலர் கூறுகின்ற அதேவேளை வேறு சில அமைச்சர்கள் விகிதா சாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் என்றாலும் தேர்தல்களை அரசாங்கம் நடத்தியே தீரும் என்று கூறுகிறார்கள். இதன் காரணமாக மாகாணசபை தேர்தல்கள் விவகாரம் ஒரு குழப்ப நிலையிலேயே இருக்கிறது.

இத்தகையதொரு பின்புலத்திலேயே, மாகாண ஆட்சி முறையைக் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் செயற்பா டுகளை வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சி கள் முன்னெடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அதே வேளை, மாகாணசபை முறையின் மூலம் தமிழர்கள் எந்தப் பயனையும் அடைய முடியாது என்றும் ஒற் றையாட் சியின் கீழ் பயனுறுதியுடைய அதிகாரப்ப கிர்வை ஒருபோதும் செய்வது சாத்தியமில்லை என்றும் நிலைப்பாட்டைக் கொண்டிருப்போர் மாற்று வழியைக் கூறுவதாகவும் இல்லை.

மாகாணசபை முறையை மாத்திரமல்ல, இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட கடந்த கால முயற்சிகள் சகலதையும் கடுமையாக எதிர்த்த கசப்பான ஒரு கடந்த காலத்தைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே இன்று பதவியில் இருக்கிறது. அத்துடன் புதிய அரசியலமைப்பை வரைவதற்கான செயன்முறைகளை விரைவில் முன்னெடுக்கப்போவதாகவும் அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது.

தென்னிலங்கையில் குறிப்பாக, சிங்கள தேசியவாத சக்திகள் மத்தியில் 13 வது திருத்தத்துக்கு இருந்துவரும் எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கின்ற அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வு எத்தகைய வடிவில் அமையும் என்ற கேள்வி எழுகிறது. புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று அரசாங்க தலைவர்கள் கூறுகிறார்களே தவிர, எதிர்காலத்தில் அதிகாரப்பகிர்வு ஏற்பாடு எத்தகைய வடிவில் அமையும் என்று சிறுபான்மைச் சமூகங்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் எந்த கருத்தையும் கூறுவதாக இல்லை.

இனப்பிரச்சினை விவகாரத்தில் சிங்கள தேசியவாத சக்திகளை பகைத்துக் கொள்ளக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் தேசிய மக்கள் சக்தி எடுக்கப்போவதில்லை. எதிர்க்கட்சிகளும் குறிப்பாக, ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன மற்றும் அவர்களுடன் இணைந்த தேசியவாத சக்திகள் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை இனவாத அடிப்படையில் முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டிருக்கின்றன.

அதேவேளை, 13 வது திருத்தமும் இல்லாமல் போனால் அதையும் விட குறைவான அதிகாரப்பகிர்வு ஏற்பாடு ஒன்றை கொண்டு வருவதற்காவது அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை ஏற்படுத்தக்கூடிய அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வல்லமை இன்றைய

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்திருத்தங்களை முன்னெடுக்க மக்களின் ஆணை மாத்திரம் போதாது!



கலாநிதி ஜெகான் பெரேரா

மக்களிடமிருந்து பாரியதொரு ஆணையுடன் பதவிக்கு வந்தது தற்போதைய அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். இந்த ஆணை 'முறைமை மாற்றத்துக்கானது" (ஞலளவநஅ உாயபெந) என்று பரவலாக வியாக்கியானம் செய்யப்படுகிறது. தங்களின் மீதான நம்பிக்கையின் விளைவாக மக்கள் தந்ததே இந்த ஆணை என்பது போன்று அரசாங்கத்தின் தலைவர்கள் அடிக்கடி உரிமைகொண்டாடி பேசுகிறார்கள். இந்த மனோபாவம் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் பிரச்சினைகளை உருவாக்குகின்றது.

ஜனநாயகக் கோட்பாட்டில் நியாயப்பாடு என்பது தனியே தேர்தல் வெற்றியில் இருந்து மாத்திரமல்ல, சகல குடிமக்களினதும் இணக்கம் மற்றும் பங்கேற்பில் இருந்தும் எழுவதாகும். ஜனநாயகக் கோட்பாடு பெரும்பான்மையினரின் விருப்பத்தை மாத்திரமல்ல, மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றதும் சிறுபான்மையினரின் குரல்களை செவிமடுத்து மதிப்பளிக்கப்படுவதை உறுதிசெய்கின்றதுமான அரசாங்கத்தை உள்ளடக்கியதாகும்.

இலங்கை ஒரே இயல்பான சமுதாயம் அல்ல. அது பல பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் மற்றும் அடையாளங்களைக் கொண்ட பன்முகத்தன்மை கொண்ட ஒரு சமுதாயமாகும். இலங்கை முழுவதும் 1835 ஆண்டில் மாத்திரமே பிரிட்டிஷாரினால் ஒரு நாடாக ஒரு ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. மாற்றத்துக்கான ஒரு ஆணை என்பது தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மாத்திரம்தான் அதன் ஒரே பதுகாவலர்கள் என்று அர்த்தப்படாது.

அந்த மாற்றம் எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கோ அல்லது மாற்றத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளுடன் வாழவேண்டியவர்களின் கருத்துக்களை கேட்டறியாமல் செயற்படுவதற்கோ அந்த ஆணை தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு தகுதியைக் கொடுக்கவில்லை. அரசாங்கம் அதன் இரண்டாவது வருடத்திற்குள் பிரவேசிக்கின்ற நிலையில், தேர்தல் நேரத்தில் பெற்ற ஆணையைப் பற்றியது மாத்திரமே ஜனநாயகம் அல்ல என்பதை அது ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். 2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது அரசாங்கமும் அனுபவிக்க நேர்ந்ததைப் போன்று ஆணை இல்லாமல் போய்விட முடியும்.

ஜனநாயத்தில் ஆட்சிமுறை என்பது மக்களுடனும் பங்கும் ஈடுபாடும் கொண்ட ஏனைய தரப்புகளுடனும் பேச்சுவார்த்தையையும் கலந்தாலோசனையையும் செய்யும் ஒரு செயன்முறையில் ஈடுபடுவதைப் பற்றியதாகும். கல்விச் சீர்திருத்தம் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றாகும். கல்விச் சீர்திருத்தம் குறித்து எந்தவிதமான எண்ணத்தை அல்லது தடயத்தையும் அறிந்திராத மக்களுக்கு அரசாங்கம் அதன் செயற்திட்டத்தை மூன்று மாதங்களுக்கு முன்னர் அறிவித்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து முன்னேற்றம் அல்ல எதிர்ப்பே கிளம்பியதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

சீர்திருத்தங்கள் கண்டனத்துக்குள்ளாகின. அந்த கண்டனங்கள் சில சந்தர்ப்பங்களில் நியாயமான காரணங்களிலும் வேறு சில சில சந்தர்ப்பங்களில் கற்பனைத்தன்மை கொண்டவையாகவும் இருந்தன. வரலாற்றின் முக்கியத்துவம் குறைக்கப்படுவதாக ஒரு கதை பரப்பப்பட்டது. பாடவிதான மாற்றங்கள் பாடசாலைக் கல்வியை வர்த்தகமயமாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதாக தொழிற்சங்கங்கள் முறையிட்டன. உள்நாட்டு விழுமியங்கள் வெளிநாட்டு விழுமியங்களினால் பதிலீடு செய்யப்படுவதாக ஏனையவர்கள் கூறினார்கள்.

இந்த அக்கறைகள் எல்லாம் பெறுமதியானவையோ இல்லையோ, அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னதாக கல்விச் சீர்திருத்தங்களை கொண்டுவருவதன் காரணத்தை அரசாங்கம் விளக்கிக்கூறியிருந்தால் அவற்றைச் சிறந்த முறையில் கையாண்டிருக்லாம். ஒரு வகையில் அரசாங்கம் சீர்திருத்தங்களுக்கான எதிர்ப்பு வலுவடைவதற்கான சூழ்நிலைகளை அரசாங்கம் உருவாக்கிவிட்டது.


நேரடியாகப் பாதிக்கப்படக்கூடிய ஆசிரியர்கள், கல்விமான்கள், மதத் தலைவர்கள் அல்லது பெற்றோர்களுடன் சீர்திருத்தங்கள் பற்றிய விபரங்களை விநியோகித்து அவை குறித்து அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை. எதிர்க்கட்சிகளுடனோ அல்லது சிவில் சமூகத்துடனோ பூர்வாங்க கலந்தாலோசனைகள் செய்யப்படவில்லை. பதிலாக, முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டம் கலந்தாலோசனைக்கான அல்லது மீள்பரிசீலனைக்கான ஒரு வரைவாக இருந்திருக்க முடியும். ஒரு முன்கூட்டிய கட்டத்தில் அரசாங்கம் திறந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால் தவறான விளக்கப்பாடுகள் பலவற்றை தவிர்த்திருக்க முடியும்.

### மீண்டும் பின்வாங்கல்

கல்வித்துறையைப் பொறுத்தவரை அரசாங்கம் இன்னொரு பிரச்சினையில் தற்போது தற்காப்பு நிலையில் இருக்கிறது.வீட்டிலும் பாடசாலையிலும் சிறுவர்களை உடல்ரீதியாகவும் மனோரீதியாகவும் தண்டிப்பதை தடுப்பதற்கு சட்டங்களில் கொண்டு வருவதற்கு உத்தேசிக்கப்பட்ட சீர்திருத்தமே அந்த பிரச்சினையாகும். "உடல்ரீதியான தண்டனை மீதான தடை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நல்லதொரு நடைமுறை" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

தண்டனைச் சட்டக்கோவைக்கு உத்தேச திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமாக சிறுவர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முன்முயற்சியை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வரவேற்றது. 18 வயதுக்கு குறைந்த எவரையும் உடல்ரீதியாகவோ அல்லது உடல்ரீதியாக இல்லாத முறையிலோ தரக்குறைவான முறையிலும் தீங்கிழைக்கக்கூடிய முறையிலும் கொடூரமாக தண்டனைக்குள்ளாக்கும் சகல நடவடிக்கைகளையும் தடைசெய்வதே உத்தேச திருத்தங்களின் நோக்கமாகும்.

ஆனால், அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை உத்தேச சீர்திருத்தங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் சமூகம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் முன்கூட்டியே கலந்தாலோசிக்கத் தவறிவிட்டது. இந்த பிரச்சினையிலும் கூட அரசாங்கம் பின்வாங்குகிறது போன்று தெரிகிறது.




அரசாங்கத்தின் யோசனைகளை எதிர்ப்பதில் ஆசிரியர்கள் சங்கங்களும் பெருமளவு மதத்தலைவர்களும் முன்னரங்கத்தில் நிற்கிறார்கள். உடல்ரீதியான தண்டனையை (பிரம்படி) சட்டவிரோதமானதாக்கினால் பாடசாலைகள் சமாளிக்கமுடியாதவையாக வந்துவிடும் என்பது அவர்களது அக்கறையாக இருக்கிறது. ஆனால், பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணுவதை சமரசம் செய்யாமல் உடல்ரீதியான தண்டனையில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் சட்டங்களை இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட கல்விக்கான உரிமைச் சட்டம் பாடசாலைகைளில் உடல்ரீதியானதும் மனோரீதியானதுமான தண்டனைகளை வெளிப்படையாகவே தடைசெய்கிறது. அவ்வாறு தண்டிப்பது தண்டனைக்குரிய குற்றமாக்கியிருக் கிறது. சிறுவர்கள் ஆதரவானதும் பாதுகாப்பானதுமான சூழ்நிலையில் கல்வி கற்பதை அந்த சட்டம் உறுதிசெய்கிறது.

அதே போன்றே ஜப்பானிலும் பாடசாலை கல்விச்சட்டத்தின் 11 வது சரத்தின் கீழ் பாடசாலைகளில் உடல்ரீதியான தண்டனையை தடைசெய்திருக்கிறது. 1947 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்த தடை உடல்ரீதியான தண்டனை வழங்குவதன் மூலமாக ஒழுங்கு கட்டுப்பாட்டை பேணுவதை தடுப்பதை நோக்கமாக கொண்டது. ஒழுங்கு, கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளை அந்த சட்டம் அனுமதிக்கின்ற அதேவேளை, உடல்ரீதியான தண்டனையை பிரத்தியேகமாக தவிர்க்கிறது. இவ்வாறான சட்டங்களைக் கொண்டிருப்பதால் இந்தியாவிலோ அல்லது ஜப்பானிலோ பாடசாலைகள் குழப்பத்தில் மூழ்கிவிடவில்லை. பதிலாக, வன்முறையின்றி ஒழுங்கைப் பேணுவதற்கான புதிய வழிமுறைகளை ஆசிரியர்கள் கையாளுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன.

தற்போது மிகவும் ஆவேசமானவையாக ஒலிக்கின்ற அபிப்பிராயங்களை வெறுமனே பின்பற்றுவது அல்ல, உயர்ந்த நியமங்களை நோக்கி சமுதாயத்தை வழிநடத்துவதே அறிவார்ந்த ஆட்சிமுறையாகும். மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத சட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்காது என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க கூறியிருக்கிறார். புரிந்துணர்வு எட்டப்படும் வரை மக்களுடன் அரசாங்கம் பேசும் என்று ஜனாதிபதி கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

### தோல்விகளை வெற்றிகொள்தல்

கலந்தாலோசனைகளில் ஈடுபடுவதற்கு தவறியமை அரசாங்கத்தின் இன்னொரு முயற்சியையும் ஆபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. எந்தவிதமான பாகுபாடும் இன்றி சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவதில் பற்றுறுதி கொண்டிருப்பதாக ஜனாதிபதி திசநாயக்கவும் அரசாங்க தலைவர்களும் அடிக்கடி கூறிவந்திருக்கிறார்கள். வேறுபட்ட பாலியல் நாட்டங்களைக் கொண்ட பாலியல் சிறுபான்மையினரும் சமத்துவமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

காலனித்துவ காலத்தின் தொடக்கத்தில் இருந்து அவர்கள் ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு குழுவினராக இருந்து வந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் பாலியல் வேறுபாடுகள் தொடர்பில் சகிப்புத்தன்மை கொண்டதாக இலங்கைச் சமுதாயம் இருந்ததை வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. காலனித்துவ காலத்திற்கு முந்திய இலங்கை பாலியல் பல்வகைமை தொடர்பில் சகிப்புத்தன்மையை வெளிக்காட்டியதை வரலாற்று விபரங்கள் காட்டுகின்றன. புராதன இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ஒரேபாலின உறவுமுறை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரேபாலின உறவுகளை குற்றமற்ற தாக்குவதாகவும் மாற்றுப் பாலினத்தவர்களின் உரிமைகளை விரிவுபடுத்துவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஒரேபாலின நெருக்கத்தை குற்றச் செயலாக்கியிருக்கும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் உட்பட பாகுபாடான சட்டங்களை மீளாய்வு செய்வதாகவும் பாலியல் நாட்டம் மற்றும் பால் அடையாளத்தின் அடிப்படையில் காண்பிக்கப்படும் பாகுபாட்டுக்கு எதிராக அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புக்கள் தொடர்பில் யோசனைகளை முன்வைப்பதாகவும் அந்த விஞ்ஞாபனம் உறுதியளித்தது.

ஆனால், வேறுபட்ட பாலின நாட்டங்களைக் கொண்டவர்கள் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வரவேற்பதாக அரசாங்கம் விடுத்த அறிவிப்பை இலங்கையின் கலாசாரத்துக்கு எதிரானது என்று மதத்தலைவர்களும் தேசாயவாதிகளும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அரசாங்கம் இப்போது அதன் அறிவிப்பில் இருந்தே தன்னை தூலவிலக்குவதற்கும் ஒரேபாலின உறவுகள் தொடர்பில் தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சியில் இருந்து பின்வாங்குவதற்கும் விரும்புகிறது போன்று தெரிகிறது.

பேச்சுவார்த்தையையும் கலந்தாலோசனையையும் பலவீனமாக அல்லது தேவையற்றதாக பார்ப்பதற்கு பதிலாக பிளவுபட்டிருக்கும் சமுதாயத்தில் பொது நிலைப்பாடுகளை காண்பதற்கான வழிவகைகளாக நோக்க வேண்டும். அறிவார்ந்த சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் முயற்சிகளில் அரசாங்கம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்கால அரசியல் புதிர் மாகாணசபை தேர்தல்!

பனங்காட்டான்



இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடர்ந்து தீர்மானங்களை நிறைவேற்றுவதுடன் பருவகால அறிக்கைகளையும் விடுத்து வருகிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகளின் அறிக்கை இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவதை வெளிப்படுத்தி வருகின்றன. அத்துடன் தமிழரின் நீண்டகால அரசியல் பிரச்சனைக்கான தீர்வு பற்றியும் இவை தொட்டுச் செல்கின்றன.

இதற்கு, மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்பது அவசியம் என்ற குரல் முக்கியமானதாக மாறியுள்ளது. மாகாண சபைகள் என்றதும் 13ம் திருத்தம் ஞாபகத்துக்கு வரும். 13ம் திருத்தம் என்றதும் 1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ராஜிவ் காந்தியும் தங்கள் பரிவாரங்கள் சுற்றி நிற்க ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் புகைப்படம் கண்முன்னால் வந்து நிற்கும்.

கடந்த 38 வருடங்களில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒளிப்படம் பல லட்சம் தடவைகள் அச்சு-மின்னியல்-சமூக ஊடகங்களை அலங்கரித்துள்ளது. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதோ இல்லையோ இந்த ஒளிப்படம் சாகாவரம் பெற்று நிற்கிறது என்று சொல்லலாம். இதுபோன்றதே ஜெனிவா தீர்மானங்களும்.

மகிந்தவும் கோதபாயவும் ஜனாதிபதிகளாக இருந்தபோது ஜெனிவா தீர்மானங்களை எதிர்த்ததோடு அவற்றை முழுமையாக நிராகரித்தும் வந்தனர். மைத்திரி-ரணில் நல்லாட்சிக் காலத்தில் இலங்கை அரசு ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி நல்ல பெயர் எடுத்து உலகத்தை ஏமாற்றியது. அது ராஜபக்சக்கள் ஆட்சிக்காலத்தைப் போன்று நல்லாட்சிக் காலத்திலும் பொறுப்புக்கூறலுக்கும் சர்வதேச பங்களிப்புக்கும் இடமளிக்கப்படவில்லை.

இப்போது ஆட்சியிலுள்ள ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தியும் முன்னோர்கள் பாதையிலேயே நடைபோடுகிறது. சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு ஒருபோதும் அனுமதி இல்லையென்று கூறிக்கொண்டு, கடந்த மாதம் ஜெனிவாவில் புதிய தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற அனுமதித்தது. இந்தத் தீர்மானம் மீதான உரையாடல் இடம்பெற்றவேளை வழக்கம் போன்று இந்தியா 13ம் திருத்த நடைமுறையையும் மாகாண சபை தேர்தலையும் கோரியது. இரு நாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட நாடென்ற வகையில் இந்தியா தனக்குள்ள உரிமையோடு ஒருபோதும் இலங்கையிடம் இதனை வலியுறுத்தவில்லை.

கோதபாய பதவி துறந்தபின் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க 2023ல் இந்தியா சென்றிருந்தார். இப்போதைய ஜனாதிபதியான அநுர குமர திஸ்ஸநாயக்க தமது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக கடந்த வருடம் இந்தியா சென்றார். இருவரும் இந்திய பிரதமர் மோடியை சந்தித்த பின்னர் கூட்டறிக்கைகளை வெளியிட்டனர். இவைகளில் எப்போதுமே 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது அல்லது நடைமுமைப்படுத்த வேண்டுமென்ற வரிகள் காணப்படவில்லை.

இதனூடாக வெட்டவெளிச்சமாக தெரிந்து கொள்ளக்கூடியது, 13ம் திருத்தத்தை ஒப்பந்தத்தில் புகுத்திய இந்தியாவும் அதனை ஏற்றுக்கொண்ட இலங்கையும் அதனை நடைமுறைப்படுத்தும் நிலையில் இன்று இல்லை. வசதி கருதிய மறதி போன்று சட்டப்படியான ஒப்பந்த நடைமுறை கைகழுவப்படுவதாகவே இதனைப் பார்க்கலாம்.

கடந்த மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் பங்குபற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஜெனிவா தீர்மானம் தொடர்பான அறிக்கை ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். இதன்போது எதிர்கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே கேள்வி எழுப்பியிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருக்கும் அக்கறையை அல்லது ஆதரவை இதனூடாக அறிந்து கொள்ள முடிகிறது.

> “முன்னைய தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், தோல்வி கண்டவர்களும் தங்கள் பெயரை வருமானத்துடன் தக்க வைப்பதற்காகவே மாகாண சபை தேர்தல்களை நோக்கி கூப்பாடு போடுவதாக அநுர குமரவின் தேசிய மக்கள் அரசு பார்க்கின்றது.”

இது தொடர்பாக கருத்துரைத்துள்ள கொழும்பின் ஆங்கில ஊடகமொன்று, அதன் இந்த மாத 19ம் திகதிய பதிப்பில், ‘இத்தனை வருடங்களாக மாகாண சபைகள் இல்லாமல் நாடு சரியாக இயங்கிக் கொண்டிருக்கையில் எதற்காக இந்தத் தேர்தல்கள்” என்று தலைவர்கள் கேட்கின்றனர் என சுட்டியுள்ளது. ஒன்பது மாகாண சபைகளும் இப்போது ஆளுனர்கள் நிர்வாகத்திலேயே உள்ளன. ஆளுனர்கள் எனப்படுபவர்கள் ஆட்சித் தரப்பின் நம்பிக்கையாளர்கள். இவர்களை அவர்களின் ஏஜண்டுகள் என்றும் கூறலாம். இயங்காத மாகாண சபைகளில் அக்கிராசனர்கள் (தவிசாளர்கள்) எந்தப் பணியுமின்றி கொழுத்த சம்பளத்தில் உள்ளனர் என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

அண்மையில் தென்னிலங்கையில் இடம்பெற்ற மூன்று கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களில் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி அரசு தோல்வியடைந்தது. இதனால் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் தனது தோல்வியை பகிரங்கப்படுத்த இவர்கள் விரும்பவில்லையென எதிர்க்கட்சிகள் கூற ஆரம்பித்துள்ளன.

அண்மையில் பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி.யின் தலைமையத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் மாகாண சபைத் தேர்தல்கள் பற்றியும், இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும் ஆராயப்பட்டது. எந்த ஒரு முடிவும் எட்டப்படவில்லையாயினும் மாகாண சபைத் தேர்தலை 2026ல் நடத்துவதாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்று அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எல்லை நிர்ணய ஆணையம் எல்லைகளை தீர்மானிக்க வேண்டும், எந்த முறையில் தேர்தல்களை நடத்துவதென நாடாளுமன்றம் முடிவெடுக்க வேண்டும் ஆகிய இரண்டும் நிறைவடையும் வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில்லையெனவும் இங்கு முடிவெடுக்கப்பட்டதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்துவதற்கு நாட்டில் எந்தச் சட்டமும் இல்லையென்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றமே இதனைத் தீர்மானிக்க வேண்டுமென்று கூறி, தேர்தலை நடத்த வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையை இவர் நினைவுபடுத்தியுள்ளார்.

மறுபுறத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் வடக்கில் சமஷ்டி அரசு உருவாகி விடுமென்று தென்னிலங்கையை அச்சுறுத்தும் பாணியில் கருத்து வெளியிட்டுள்ளார் சரத் வீரசேகர (இதற்குப் பெயர்தான் இனவாதம் என்பதை ஆட்சியிலுள்ளவர்கள் எப்போது புரிந்து கொள்வார்களோ தெரியாது). கோதபாய ஆட்சிக்காலத்தில் அவருக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவுமிருந்த சரத் வீரசேகர யுத்த காலத்தில் கடற்படை அதிகாரியாகவிருந்து இனஅழிப்பை மேற்கொண்டவர்.

13ம் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் மீது அக்கறையில்லாத இலங்கை-இந்திய அரசாங்கங்கள் அதன் புவிசார் நிகழ்ச்சிக்கு இணங்க வேண்டுமென்று விரும்பும் போதெல்லாம் அதனை ஒரு கைத்தடியாகப் பயன்படுத்துகிறதே தவிர இதில் எந்தளவிலும் அக்கறை காட்டவில்லை.

மாகாண சபைத் தேர்தல்களை தோற்றுப்போயுள்ள அரசியல்வாதிகளும் எதிர்கட்சிகளிலுள்ள சிலருமே அக்கறை காட்டுவதாக அநுரவின் ஆட்சித் தரப்பினர் கூறி வருகின்றனர். மாகாண சபைகளை தேர்தல் ஊடாக கைப்பற்ற முடியாது போனாலும் அவற்றின் சாதாரண உறுப்பினர்களாகி எதிர்க்கட்சிகளில் இருந்தாலே போதுமென்ற சிந்தனையில் இவர்கள் தேர்தல்களை கேட்பதாக விமர்சிக்கப்படுகிறது. இந்த நிலைமை தெற்கில் மட்டுமன்றி, தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் கூட அவ்வாறே காணப்படுகிறது.

தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு கூட்டாக மாகாண சபைத் தேர்தல்களை சந்தித்து அநுர அரசுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று கூறி இப்போது பிரதேச வாரியாக கூட்டங்களை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு நடத்தி வருகிறது. இதன் பங்காளிகளான தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கிளிநொச்சி சந்திரகுமார் ஆகியோரும் தோல்வி கண்ட அரசியல்வாதிகள்தான். வடமாகாண சபையின் முதலமைச்சராக தாமே வரப்போவதாக கனவு காணும் தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனும் தேர்தல்களில் தோல்வி கண்ட ஒருவர்தான்.

கடந்த கால தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், தோல்வி கண்டவர்களும் இனத்தின் பெயரால் தங்களுக்கு ஒரு இடம் பிடிப்பதற்காகவே மாகாண சபைகளை நாடுகிறார்கள் என்பது தமிழ் மக்களிடையேயும் காணப்படும் அவதானிப்பு. இதே கருத்தை தென்னிலங்கையிலும் மையப்படுத்தி அநுர அரசு கூறி வருகிறது. அப்பாவி மகாஜனங்களை ஏமாற்றுவதற்கு மாகாண சபைத் தேர்தலை எதற்காக நடத்த வேண்டுமென்ற கேள்வி பெலவத்தை கூட்டத்திலும் பலமாக எழுப்பப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இலங்கையின் நிகழ்கால அரசியல் புதிராக மாகாண சபை தேர்தல் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை!

உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?

SUN DIRECT | TATA sky | dishtv | VIDEOCON d2h Digital DTH Service

இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!

It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.

**Telecommunications Regulatory Commission of Sri Lanka**

155 செனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)




புதிய இணைப்புக்கு
10,000/-
ரூபா
மட்டுமே!

Ask CABLE VISION

உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!

நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்: யாருடைய சூழ்ச்சி? யாருடைய இயலாமை?



நிலாந்தன்

“உயிர்கொல்லி போதைப் பொருள் விற்பனை தொடர்பான தகவல்களை நீங்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்க வேண்டாம். நேரடியாக எனக்கு வழங்குங்கள் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், அன்றைய நாளில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு முன்னால் குறிப்பிட்டிருந்தார். அந்தளவு தூரத்துக்கு இந்த உயிர்கொல்லி போதைப்பொருளுடன் தொடர்புடைய வலைப்பின்னல் இருக்கின்றது.”

இப்படித் தெரிவித்திருப்பவர் யார் தெரியுமா? வட மாகாண ஆளுநர் வேதநாயகன். யாழ்.மாவட்டச் செயலகமும் “மாற்றம்” அறக்கட்டளையும் இணைந்து, அருட்கலாநிதி டேவிட் வின்சன் பற்றிக் அவர்கள் எழுதிய ‘விடியல்’ நூலின் வெளியீட்டு விழா யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக் கிழமை மாலை (23.10.2025) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஆளுநர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் முன்பு யாழ் மாவட்டச் செயலராக இருந்த காலகட்டத்தில் நடந்ததைத்தான் அவ்வாறு கூறியுள்ளார். அவர் அவ்வாறு கூறுவதைத்தான் கஜேந்திரகுமார் அதே நாளில் நாடாளுமன்றத்தில் வைத்து வேறு வார்த்தைகளில் சொன்னார். போதைப்பொருள் வலைப்பின்னல் என்பது படைத்தரப்போடும் போலீசோடும் தொடர்புடையது என்று. கஜேந்திரக்குமார் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் கடந்த 16ஆண்டுகளாகக் கூறிவரும் குற்றச்சாட்டு இது.


இலங்கைத் தீவின் கரையோரங்கள் நீட்டுக்கும் பயணம் செய்யும் எவரும் ஒரு விடயத்தைக் கண்டுபிடிக்கலாம். வடக்கு கிழக்கில் உள்ள கடற்கரைகள் நீட்டுக்கும் தொடர்ச்சியாகப் படை முகாம்களைக் காணலாம். இவ்வாறு தமிழ்க்கடல் நீட்டுக்கும் படை முகாம்களை வைத்துக்கொண்டு போதைப்பொருள் உள்ளே வருகிறது என்று சொன்னால் அது எப்படி வருகிறது? யாரால் கொண்டு வரப்படுகிறது? யார் அதைத் தடுக்காமல் விடுகிறார்கள்? அல்லது யார் யார் அந்த வலைப் பின்னலுக்குள் வருகிறார்கள்?


போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்பவர்கள், தாங்கள் அடையாளங் காட்டிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பின் விடுவிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே தமிழ்ப் பகுதிகளில் போதைப்பொருள் வலைக் கட்டமைப்பானது எங்கேயோ ஒரு மையத்திலிருந்துதான் இயக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

ராணுவ ரீதியாக வெற்றிக் கொள்ளப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை அரசியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தோற்கடிப்பதற்கு போதைப் பொருள் தேவை. அந்த மக்களை இலட்சியவாதத்திலிருந்து திசை திருப்புவதற்கு போதைப் பொருள் தேவை. அவர்களை இலட்சியப் பற்றோடு ஒன்று திரள்வதைத் தடுத்து சுய இன்பத்தில் மூழ்கும் உதிரிகளாக மாற்றுவதற்குப் போதை தேவை. இது அழிப்பின் இன்னொரு வடிவம். உலகில் ஆக்கிரமிக்கப்பட்ட எல்லாப் பிரதேசங்களிலும் கையாளப்பட்டு வரும் ஒரு பொதுவான உத்தி.

2009 க்குப்பின் வன்னிப் பெருநிலத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற சந்திப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகளில் உரையாடும் பொழுது அங்கு பொதுவாக பொதுமக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு இது. வன்னியில் சிறிய பெட்டிக் கடைகள் வரை போதைப்பொருள் வலைப்பின்னல் பரந்து காணப்படுவதாக அங்குள்ள செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

தலைவர்களும் வழிநடத்தும் பொறுப்பில் இருப்பவர்களும் முன்னுதாரணங்களாக மாறும்போது இளையோர் உதிரிகளாக போதைப்பொருள் வலைக்குள் ஈசல்களைப்போல சிக்க மாட்டார்கள். இலட்சியவாதிகளாக கழுகுகளைப்போல மேலெழுவார்கள்.





எனவே தமிழ்ப் பகுதிகளில் போதைப் பொருள் பாவனை என்பது தற்செயலானதோ அல்லது இயல்பாகத் தோன்றிய ஒன்றோ அல்ல. அது திட்டமிட்டு ஒரு மையத்திலிருந்து அரசியல் உள்நோக்கங்களோடு ஊக்குவிக்கப்படும் ஒரு சமூகச் சீரழிவு.

ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் அரசியல்வாதிகளும் செயல்பாட்டாளர்களும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அதற்கு எதிரான சுய பாதுகாப்புச் செய்முறைகள் தொடர்பாக எத்தனை பேர் சிந்தித்திருக்கிறார்கள்? தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும் தோல்வியுற்ற ஒரு சமூகமாகத் தொடர்ந்து பேண விரும்பும் தரப்புகள் அவ்வாறுதான் செய்யும். அதுதான் அவர்களுடைய ராணுவ அரசியல் நிகழ்ச்சி நிரல். ஆனால் அதை எதிர்கொள்வதற்குத் தமிழ்த்தரப்பு என்ன செய்கிறது? எதிரிக்கு எதிராக குற்றஞ் சாட்டுவதோடு மட்டும் நின்று விடலாமா? அல்லது தன்னை ஒரு தேசமாகத் திரட்டி, தனக்கு வேண்டிய சுயபாதுகாப்புக் கவசங்களைக் கட்டியெழுப்ப வேண்டாமா?

போதையில் மூழ்கும் ஒரு பகுதி தமிழ் இளையோரை இலட்சியப்பற்றுள்ள ஒரு திரட்சியாக மாற்றவேண்டியது யாருடைய பொறுப்பு? போதைக்கு பதிலாக நம்பிக்கையை,இலட்சியத்தை, நாட்டுப்பற்றைக் கட்டியெழுப்ப வேண்டியது யாருடைய பொறுப்பு? தொழில்நுட்பத்தின் கைதியாக உள்ள ஒரு தலைமுறைதான் அதிகம் போதையில் நாட்டம்கொள்கிறது. அந்தத் தலைமுறையானது எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் இலட்சிய தாகத்தோடும் அண்ணாந்து பார்க்கின்ற ஆளுமைகள் தமிழ் சமூகத்தில் உண்டா? ஒரு தலைமுறையை அவ்வாறு வசப்படுத்தத் தவறியது யாருடைய பொறுப்பு? எனவே போதைப் பொருள் வலைப்பின்னல் எனப்படுவது தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமையுந்தான். தோல்வியுந்தான்.

கடந்த 16 ஆண்டுகளிலும் கிராம மட்டங்களில், அரச அலுவலகங்களில் அரசு சார்பற்ற நிறுவனங்களால் அல்லது அரச அலுவலகங்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற கருத்தரங்குகள் சந்திப்புகள் பயிற்சிப் பட்டறைகளின்போது நான் ஒரு கேள்வியைக் கேட்பதுண்டு. “நீங்கள் ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலம் கைபேசியில் செலவழிக்கிறீர்கள்?” பெரும்பாலானவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலம் தொடக்கம் 6 மணித்தியாலம்வரை கைபேசிகளில் தங்களுடைய கண்களை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். யாழ்குடா நாட்டில் உள்ள விவசாயக் கிராமம் ஒன்றில் நடந்த ஒரு சந்திப்பில் கிட்டத்தட்ட 30க்கும் குறையாத பெண்கள் வந்திருந்தார்கள். எல்லாருமே குடும்பப் பெண்கள். அவர்களிடம் இதே கேள்வியைக் கேட்டபோது சராசரியாக அனைவருமே ஒரு நாளைக்கு குறைந்தது ஐந்து அல்லது ஆறு மணித்தியாளங்கள் கைபேசியில் செலவழிப்பதாகக் கூறினார்கள்.

அவர்களிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்டேன் “உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுக்கும்போதோ அல்லது அவர்களோடு ஆற அமர இருந்து கதைக்கும் பொழுதோ அவர்களுடைய கண்களைப் பார்த்துக் கதைப்பது உண்டா?” பெரும்பாலானவர்கள் இல்லை என்று சொன்னார்கள். உங்களுடைய பிள்ளைகளின் கைபேசிச் சேமிப்பில் யார் யாருடைய இலக்கங்கள் உண்டு? யார் யாரோடு அவர்கள் ரகசியங்களைப் பரிமாறுகிறார்கள்? யார் யாரோடு வெளியே சுற்றுகிறார்கள்? என்ற விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளின் உடல் அசைவுகளில், கண்களில், குரலில், பொதுவாக நடத்தைகளில் தோன்றும் மாற்றங்களை நீங்கள் தொடர்ச்சியாக கண்காணிப்பதுண்டா? மிகச் சிலர்தான் ஓம் என்று பதில் சொன்னார்கள்.

தொகுத்து பேசும் போது நான் அவர்களிடம் கேட்டேன் “கைபேசியோடு சுமாராக 5 மணித்தியாலங்களை செலவழிக்கின்றீர்கள். ஆனால் உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளோடு அவ்வாறு ஆற அமர ஒய்வாக இருந்து கதைப்பது குறைவு என்று கூறுகிறீர்கள். உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளிக்குள்தானே வாளும் போதை பொருளும் உள் நுழைகின்றன? உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளிக்குள்தானே பிறத்தியார் உள் நுழைகிறார்கள்?” அந்தப் பெண்கள் அமைதியாக இருந்தார்கள். இதுதான் யதார்த்தம். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் மதத் தலைவர்களுக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் அந்த பிள்ளைகளை வழி நடத்த வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களுக்கும் இடையே நெருக்கம் குறையும்போது அந்த இடைவெளிக்குள் போதைப் பொருள் வருகிறது. வாள் வருகிறது.

கிராமம், கிராமமாக இருக்கும்போது அங்கே கிரீஸ் மனிதன் வர முடியாது. வாள் வர முடியாது. அதற்கு யாழ்ப்பாணத்தில் பல உதாரணங்கள் உண்டு. நடு இரவு வரை விழித்திருந்து தெருக்களில், சந்திகளில் கூடியிருந்து கதைக்கின்ற கரம் அல்லது சீட்டுக்கட்டு விளையாடுகின்ற கிராமங்களில் வாள் வெட்டுக் குழுக்களோ அல்லது கிரீஸ் மனிதர்களோ நுழைய முடியாது. அவ்வாறு நுழைந்த கிரீஸ் மனிதனை நாவந்துறை மக்கள் துரத்திக் கொண்டு போனதை இங்கே ஞாபகப்படுத்தலாம். அவ்வாறு நுழைந்த வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த நபர்களை கோண்டாவில் பகுதியில் மக்கள் சுற்றி வளைத்துப் பிடித்ததை இங்கு சுட்டிக் காட்டலாம். எனவே கிராமங்கள் கிராமங்களாக இருந்தால் அவற்றுக்குள் கிரீஸ் மனிதர்களோ வாள் வெட்டுக்காரரோ வர முடியாது.

அப்படித்தான் குடும்பங்கள் குடும்பங்களாக இருக்கும்போது வளர்ந்த பிள்ளைகளை வெளியாட்கள் கையாள முடியாது. பெற்றோரால் அல்லது ஆசிரியர்களால் அல்லது பொறுப்பானவர்களால் தொடர்ச்சியாகக் கவனிக்கப்படுகின்ற பிள்ளைகள் போதைப் பொருளை நுகர்வது குறைவு. நுகரத் தொடங்கினாலும் தொடக்கத்திலேயே அதைக் கண்டுபிடித்து விடலாம்.

எனவே தமிழ் மக்களைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு போதைப்பொருள் உள்ளே கொண்டுவரப்படுகிறது என்ற குற்றச்சாட்டை தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. கைபேசி செயலிகளின் கைதிகளாக உள்ள பெற்றோரும் மூத்தவர்களும் பிள்ளைகளுக்கும் தங்களுக்கும் இடையே இருக்கக் கூடிய இடைவெளிகளை ஆகக்கூடிய பட்சம் குறைக்க வேண்டும். உதிரிகளாக இருக்கும் இளையவர்கள்தான் போதைப் பொருள் வலை பின்னலுக்குள் அதிகம் சிக்குகிறார்கள். எனவே இளையோரை ஏதாவது ஒரு இலட்சியத்தை நோக்கி அல்லது நம்பிக்கையை நோக்கித் திரட்ட வேண்டும். அதை அரசியல்வாதிகளும் ஆசிரியர்களும் செயற்பாட்டாளர்களும் சில சமயங்களில் மதத் தலைவர்களும் செய்யலாம்.

தேசியவாத அரசியல் என்பது அதுதான். அவரவர் அவரவர்க்குரிய சமூகக் கடமையை பொறுப்போடு செய்வது. சமூகத்தின் ஆகச்சிறிய நிறுவனமாகிய குடும்பத்தில் தொடங்கி கிராமங்களை, மாவட்டங்களை, மாகாணங்களை, தேசத்தை, தாயகத்தைக் கட்டியெழுப்புவது. இது ஒருவிதத்தில் கூட்டுச் சிகிச்சை. மருத்துவர்களால் மட்டும் கையாளப்பட முடியாத ஒரு விடயம். அரசியல்வாதிகள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க., கூட்டணியை உடைக்க தன் கட்சியினருக்கு விஜய் உத்தரவு!

வரும் சட்டசபை தேர்தலில், தி.மு.க., கூட்டணியை வீழ்த்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள த.வெ.க., தலைவர் விஜய், அக்கூட்டணியில் உள்ள காங்கிரஸ் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சிகளை தங்கள் பக்கம் இழுத்து, புது அணி அமைக்க முடிவு செய்துள்ளார். அதனால், ஆளுங்கட்சி கூட்டணியை உடைக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்யும்படியும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும்படியும், தன் கட்சியின் முன்னணி நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அவர்களும் அதற்கான பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியை துவக்கிய நடிகர் விஜய், "அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் தமிழக சட்டசபை தேர்தலில் கட்சி போட்டியிடும்" என்றும் அறிவித்து, விக்கிரவாண்டி மற்றும் மதுரை என இரண்டு இடங்களில் பிரமாண்ட மாநாடுகளையும் நடத்திக் காட்டினார் அத்துடன் தேர்தலுக்கான பிரசாரத்தையும் துவக்கினார்.

அடுத்தாண்டு பிப்ரவரி வரை, ஒவ்வொரு சனிக்கிழமையன்றும், தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று, மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டது.

அதன்படி, திருச்சியில் துவங்கிய அவரது பிரசார பயணம், நாகை, திருவாரூர், நாமக்கல், கரூர் என நீண்டது. கடந்த மாதம் 27ல் கரூரில் அவர் பிரசாரம் செய்த போது, அளவுக்கு அதிகமாக மக்கள் திரண்டதால், கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, 41 பேர் பலியாகினர். இது, நடிகர் விஜயை அதிர்ச்சி அடைய வைத்தது.

நெரிசல் சம்பவத்தின் பின்னணியில், பெரும் சதி இருக்கலாம் என விஜய் சந்தேகப்பட்டார். அதனால், த.வெ.க., சார்பில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொட ரப்பட்டது.

வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ., விசாரிக்கவும், அதை உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான சிறப்பு குழு கண்காணிக்கவும் உத்தரவிட்டது.

விஜய் கட்சி துவங்கிய போது, "பா.ஜ., - தி.மு.க., தவிர மற்ற கட்சிகளோடு கூட்டணி அமைக்கலாம்" என கருதப்பட்டது. ஆனால், த.வெ.க., தலைமையில் தான் கூட்டணி. த.வெ.க., வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்பட்சத்தில், கூட்டணி கட்சிகளுக்கும் ஆட்சியில் பங்கு தருவோம்" என்று விஜய் அறிவித்தார்.

ஆனால், கரூர் சம்பவத்துக்கு பின், அவரது மன நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. தேவையானால், "யாருடனும் கூட்டணி சேரலாம் தி.மு.க.,வை தோற்கடிக்க வேண்டும் அது தான் ஒரே இலக்கு" என, கட்சியின் முன்னணி தலைவர்களிடம் விஜய் கூறியிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

கரூர் சம்பவத்தின் பின்னணியில் தி.மு.க., இருக்குமோ என்ற சந்தேகம் விஜய்க்கு உள்ளது. அத்துடன் இந்த சம்பவத்தை வைத்து, த.வெ.க.,வை முழுமையாக அழித்து விட வேண்டும் என தி.மு.க., தரப்பு செயல்படுவதாகவும் விஜய் நினைக்கிறார்.

அதனால், கட்சி துவங்கிய போது இருந்த கூட்டணி நிலைப்பாட்டிலிருந்து முழுமையாக மாறி இருக்கிறார். அரசியல் ரீதியில், தி.மு.க.,வுக்கு எதிராக இருக்கும் அனைத்து கட்சிகளுடனும்



பேச்சு நடத்தும்படி, கட்சி நிர்வாகிகளை அறிவுறுத்தி உள்ளார்.

ஆயினும், கட்சியின் முன்னணி தலைவர்களோ, "வலுவான கூட்டணி கட்டமைப்பில் இருக்கும் தி.மு.க., கூட்டணியை உடைத்து, அங்கிருந்து காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளை, த.வெ.க., பக்கம் கொண்டு வந்தாலே போதும்.

" த.வெ.க., தலைமையில் அமையும் புதிய கூட்டணியே, தி.மு.க., கூட்டணியை வீழ்த்தி விடும்" என்று நம்புகின்றனர். இதை விஜயிடமும் சொல்லி, அதற்கேற்ப காய் நகர்த்தல்களை துவங்கி உள்ளனர். இதற்காக, காங்கிரசில் கட்சியில் இருக்கும் விஜய் ஆதரவு தலைவர்களை முடுக்கிவிட்டு, "தி.மு.க., கூட்டணி வேண்டாம்" என்ற கருத்தை மையமாக வைத்து, கட்சி தலைமைக்கு நெருக்கடி கொடுக்கும்படி கேட்டுள்ளனர்.

அதன் அடிப்படையிலேயே, காங்கிரசில் இருக்கும் மூத்த தலைவர்கள் பலரும், தி.மு.க.,வுக்கு எதிராக குரல் கொடுப்பதோடு, அக்கட்சியோடு கூட்டணி வேண்டாம் என, காங்கிரஸ் தலைமைக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில், விஜய் தரப்பில் இருந்து, தமிழக காங்., மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கரிடம் பேசி உள்ளனர். அவரும், "தி.மு.க., கூட்டணி வேண்டாம்" என்ற சிந்தனையில் இருப்பதால், தலைமையிடம் அதையே வலியுறுத்தி வருகிறார். மேலும் விஜய், கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதால், காங்கிரசில் ஆதிக்கம் செலுத்தும் கிறிஸ்துவ தலைவர்களும், சோனியா வரை கூட்டணிக்காக நெருக்கடி கொடுக்க துவங்கி உள்ளனர்.

ஒருவேளை, விஜய் நினைப்பது போல த.வெ.க., - காங்., - வி.சி., கூட்டணி அமைந்து விட்டால், தமிழகத்தில் காலம் காலமாக தி.மு.க., பக்கம் சென்று கொண்டிருக்கும் கிறிஸ்துவ ஓட்டுகள் விஜய் பக்கம் வந்து விடும் என, மூன்று கட்சியினரும் முழுமையாக நம்புகின்றனர்.

கூடவே, தலித் ஓட்டுகளும் அக்கூட்டணிக்கு முழுமையாக கிடைக்கும் என்று கணக்கு போடப்படுவதால், அப்படியொரு கூட்டணியை ஏற்படுத்த தலைவர்கள் முயன்று வருகின்றனர்.

இந்த விஷயத்தில், பல்வேறு கிறிஸ்துவ அமைப்புகளைச் சேர்ந்த பாதிரியார்களும் களம் இறங்கி உள்ளனர். அவர்கள், புதிய கூட்டணிக்காக, கிறிஸ்துவ மக்களை தயார் செய்யும் பணியில் கிறிஸ்தவ தேவாலயங்கள் வாயிலாக ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரம், சித்தாந்த ரீதியில் பா.ஜ.,வுடன் எதிர் நிலையில் விஜய் இருக்கிறார். அதனால், "அக்கட்சியோடு கூட்டணி இல்லை என்றாலும், தி.மு.க.,வை எதிர்க்கும் விஷயத்தில் பா.ஜ.,வும் உறுதியாக இருப்பதால், அரசியலை கடந்து பா.ஜ.,வோடு நல்ல உறவில் இருக்கலாம்" என்றும், கட்சியின் முன்னணி தலைவர்களிடம் சொல்லி இருக்கிறார்.

அதனால், டில்லி சென்ற அவரது கட்சியைச் சேர்ந்த ஆதவ் அர்ஜூனா, பா.ஜ., தலைவர்கள் சிலரை சந்தித்து பேசி, விஜயின் எண்ணத்தை அவர்களிடம் பகிர்ந்துள்ளார். இதற்கிடையில், தற்காலிகமாக நிறுத்தப்பட்ட விஜயின் பிரசாரத்தை, அடுத்த மாதத்தில் இருந்து மீண்டும் துவக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாட்டு அரசியல் திணறுகிறதா?

நியூசிலாந்து சிற்சபேசன்

செழுமையான காலகட்டமொன்றிலேயே தமிழ்நாடு காணப்படுகின்றது. சமூகநீதிக்கான குரல் ஓங்கிஒலித்த மண்ணிலே வாய்ப்புக்கள் வளமடைந்திருக்கின்றன. உழைத்தால் உயரலாம் என்னும் நிலை இயல்பாகியிருக்கின்றது. கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வலுவடைந்திருக்கின்றது. பொருளாதார வளர்ச்சி வேகமடைந்திருக்கின்றது.

அன்றொருகாலத்தில், தமிழ்நாட்டிலிருந்து பொருளாதாரவளம் தேடி பர்மா, மலேயா, பிஜி போன்ற தூரதேசங்களுக்கு ஓடினார்கள். இன்று, அசாம், மணிப்பூர், நேபாளம், பீகார் என விந்திய மலைக்கு அப்பாலிருந்தெல்லாம் பிழைப்புத்தேடி பலர் தமிழ்நாட்டிற்கு ஓடிவருகின்றனர்.

பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி முக்கியமான உந்துசக்தியாகும். தமிழ்நாட்டிலே 650க்கு மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இரண்டு லட்சம் வரையான பொறியியலாளர்கள் ஆண்டுதோறும் உருவாகின்றனர். ஐயாயிரம் வரையான கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகளை உருவாக்குகின்றன. 80வரையான மருத்துவக்கல்லூரிகள் உள்ளன. 12,000 வரையிலான மருத்துவர்கள் ஆண்டுதோறும் தயாராகின்றனர்.

இந்தியாவிலேயே உச்சப்பட்சமான மருத்துவச்சேவை தமிழ்நாட்டிலேயே கிடைக்கின்றது. மூவாயிரம் வரையான அரச மருத்துவமனைகள் உள்ளன. பெருவாரியான தனியார் மருத்துவமனைகளும் காணப்படுகின்றன. மருத்துவச் சேவைகளின் தலைநகராகச் சென்னை கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து, மருத்துவ சிகிச்சைக்காக, நாளாந்தம் 100 வரையானோர் சென்னை வருவதாகச் சொல்லப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகள் மேம்பட்டிருக்கின்றன. பெருந்தெருக்கள், மேம்பாலம், "பைபாஸ்" என்று சொல்லக் கூடிய சனத்திரள் கூடிய பகுதிகளை எளிதில் கடக்கக்கூடிய சுற்றுப்பாதைகள் என்பவற்றுக்கு மகுடமாக மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்துமே தொடர்ச்சியாக விரிவாக்கம் செய்யப்படுகின்றன. இத்தகையவொரு சூழலிலேயே பொருளாதார வளர்ச்சி வேகமெடுக்கின்றது.

வானைத்தொடத் துடிக்கும் ஒரு சமூகக் கட்டமைப்பு தமிழ்நாட்டில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைகின்றது. ஆனால், அதனை தூரநோக்குடன்

வழிநடாத்தக்கூடிய அரசியல் தலைமை காணப்படுகின்றதா என்ற கேள்வியை எளிதில் கடந்து போக முடியவில்லை.

முன்னொரு காலத்தில், அரசியல் சித்தாந்தங்களின் நாற்றுமேடையாக தமிழ்நாடு அறியப்பட்டது. தற்போது, அரசியல் சித்தாந்தம் என்றால் "கிலோ என்ன விலை?" என்று கேட்கும் நிலையே ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பிராமண ஆதிக்கத்துக்கு எதிராகவும், சமூக நீதியை வலியுறுத்துவதுமான விழிப்புணர்வு சமூகமட்டத்தில் காணப்பட்டது. அதுவே தெளிவான இலக்கை அடையாளப்படுத்தியது. அதனால் அரசியல் சித்தாந்தம் வசப்பட்டது.

அத்தகையதொரு பின்னணியிலேயே, சென்னை மாகாணத்தில், நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) உருவாகியது. அன்றைய காலத்தில், இந்திய தேசியக் காங்கிரஸ் வலுவான தரப்பாக அகில இந்திய அளவிலே காணப்பட்டது. அதற்கு வலுவான எதிர்த்தரப்பாக, சென்னை மாகாணத்தில், நீதிக்கட்சியே காணப்பட்டது.

சுமார் 13 ஆண்டுகள் சென்னை மாகாணத்தை நீதிக்கட்சி ஆட்சி செய்தது. கொள்கை அடிப்படையிலே செயல்பட்டது. பல்வேறு காத்திரமான சமூக மாற்றங்களின் ஆரம்பப்புள்ளியாகியது.

1920ல் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

1921ல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டது. அதன் மூலமாக, இடஒதுக்கீடு முறையை ஏற்படுத்தியது. அதுவே, இந்திய சட்டவாக்கல் ஆட்சிமுறையில் முதன்முதலாக உருவாகிய இடஒதுக்கீடு ஏற்பாடாகும்.

1925ல் இந்து சமய அறநிலையத் துறை சட்டம் நிறைவேற்றியது. அதுவே, இந்து ஆலயங்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான ஆரம்பப்புள்ளியாகும்.

1937 தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியடைந்தது. 1938ல் ஈ. வே. இராமசாமி நாயக்கர் நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அதன்பின்னர், நீதிக்கட்சியிலே உடகட்சிப்பூசல்கள் அதிகரித்தன. ஈ. வே. இராமசாமி நாயக்கர் வலுவடைந்தார். அதனால், நீதிக்கட்சியை 1944ல் திராவிடர் கழகமாக மாற்றியதோடு, தேர்தல்களில் போட்டியிடுவதையும் நிறுத்தினார்.

திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகமும், அதிலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தோன்றின.

1967ல் திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலில் ஆட்சி அமைத்தது. பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார். கொள்கைசார்ந்து செயற்பட்ட ஆட்சியாகியது.

சென்னை மாநிலத்தை "தமிழ்நாடு" எனப் பெயர் மாற்றம் செய்தது. அரசின் மொழிக் கொள்கையை அறிவித்தது. இருமொழித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஹிந்தி திணிப்பை நிராகரித்தது.

இவ்வாறாக, நீதிக்கட்சி தொடங்கி பேரறிஞர் அண்ணா, கலைஞர் மற்றும் எம்ஜிஆர் வரையான திராவிடக் கட்சிகளின் காலகட்டம் காணப்பட்டது. பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் கொள்கை அடிப்படையிலான செயற்பாடுகளில் தொய்வு ஆரம்பமாகியது. இருந்தாலும்கூட, முற்றிலுமாக விலகிவிடவில்லை. சமூகநீதி என்னும் சித்தாந்தம், தொட்டுக்கொள்ள ஊறுகாய்போன்றேனும், பயன்படுத்தப்பட்டது.

அதேவேளையில், கொள்கை கோட்பாடுகளிலிருந்து விலகி தனிநபர் துதிபாடும் கலாசாரம், கலைஞர் மற்றும் எம்ஜிஆர் காலகட்டங்களிலேயே

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் வரலாற்றில் முதல் பெண் பிரதமர்: பொருளாதார - அரசியல் நெருக்கடியை தீர்ப்பாரா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வரலாறு படைக்கும் ஜப்பானின் முதல் பெண் பிரதமர் சனே டகாய்ச்சி, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சரின் அபிமானி ஆவார். அறுபத்தி நான்கு வயதான பழமைவாதத் தலைவரான சனே டகாய்ச்சி, ஜப்பானின் 'இரும்புப் பெண்மணி' என்று அழைக்கப்படுகிறார்.

ஜப்பானில் முன்னைய ஷிகெரு இஷிபா தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமீபத்தில் பெரும்பான்மையை இழந்தது. இதனைத் தொடர்ந்து பிரதமர் ஷிகெரு கடந்த மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அதைத் தொடர்ந்து, உட்கட்சியில் வாக்கெடுப்பு நடந்தது. இதன் விளைவாக லிபரல் ஜனநாயக கட்சியின் புதிய தலைவராக அந்நாட்டின் முன்னாள் அமைச்சர் சனே டகாய்ச்சி (Sanae Takaichi) தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். சனே டகாய்ச்சி லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் ஆவார்.

ஜப்பானில் லிப்ரல் ஜனநாயக கட்சி என்பது மிகவும் பழமைவாத கட்சி ஆகும். இப்படிப்பட்ட கட்சிக்குள் இருந்து பெண் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரலாற்று சாதனையாக பார்க்கப்படுகிறது. இந்த வெற்றிக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த சனே, இது ஒரு புதிய சகாப்தம் என்று கூறியிருந்தார்.

கடந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தொடர்ச்சியாக தோல்விகளை லிபரல் ஜனநாயக கட்சி சந்தித்திருந்தது. இக்கட்சியின் தாராளமயக் கொள்கை தற்போது ஜப்பானில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு காரணமாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

சனே டகாய்ச்சி பிரதமராக இது அவரது மூன்றாவது முயற்சியாகும். அவரது கட்சியான லிபரல் ஜனநாயக கட்சி ஐந்து ஆண்டுகளில் நான்கு பிரதமர்களைக் கண்டுள்ளது. இவர் லிபரல் ஜனநாயக கட்சியின் கடும்போக்கு பிரிவைச் சேர்ந்தவராவார். மறைந்த முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் ஆதரவாளராக இருந்து உள்ளார்.





தற்போது பதவிக்கு வரும் அவருக்கு, ட்ரம்ப் விதித்த வரியும் ஜப்பானை நெருக்கடியில் தள்ளியிருக்கிறது. இதையெல்லாம் சனே எப்படி எதிர்கொள்ளப்போகிறார் என்பதே தற்போதைய கேள்வியாக இருக்கிறது.

**ஜப்பானிய அரசியலில் புரட்சி:**


இந்த புதிய தலைவர் தெரிவு ஜப்பானிய அரசியலில் ஒரு புதிய புரட்சியாக கருதப்படுகிறது. அவர் கட்சித் தலைவராக பதவியேற்றதைத் தொடர்ந்து ஜப்பான் நாட்டின் பிரதமராக தேர்வு ஆவதற்கான வாக்கெடுப்பு, அந்நாட்டு நாடாளுமன்ற கீழவையில் நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில், மொத்தம் உள்ள 465 ஓட்டுகளில், 237 ஓட்டுகளை பெற்று, சனே டகாய்ச்சி வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து, மேலவையில் நடைபெறும் வாக்கெடுப்பிலும் அவர் வெற்றி பெற்றார். இதன் மூலம் ஜப்பானின் புதிய பிரதமராக அவர் பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் ஜப்பான் நாட்டின் 104வது பிரதமராக ஒரு பெண் பதவியை வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பான் வரலாற்றிலேயே, முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் சனே டகாய்ச்சி பெற்றுள்ளார். வலிமையான பெண்ணாக அறியப்படும் சனே டகாய்ச்சி, ஜப்பானின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு வளமான ஜப்பானை மறுவடிவமைத்து கொடுக்கப்போவதாக உறுதியளித்துள்ளார்.

**சூரியன் முதலில் உதிக்கும் நாடு:**

ஜப்பான் 'சூரியன் முதலில் உதிக்கும் நாடு' என்றும் அழைக்கப்படுகிறது. கடின வேலை மீதான ஆர்வம், வாழ்வியல் தத்துவம் (இக்கிகை), மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை போன்றவற்றுக்குப் ஜப்பானிய மக்கள் பெயர் பெற்றவர்கள்.



**உலகில் சூரியன் முதல் உதிக்கும் சாம்ராஜ்ஜியத்தில் வரலாறு படைக்கிறார் ஜப்பானின் முதல் பெண் பிரதமரான சனே டகாய்ச்சி. இவரது வெற்றி ஜப்பானிய அரசியலில் ஒரு புதிய புரட்சியாக கருதப்படுகிறது. ஆனாலும் அமெரிக்காவின் ட்ரம்ப் அரசுடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. அந்த சவாலை டகாய்ச்சி எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.**

ஜப்பானியர்கள் புதுமைகளுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் பெயர் பெற்றவர்கள். சிலர் தனிமையை தேர்ந்தெடுத்து வாழும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர்.

ஜப்பானியர்கள் தம் பணியின் மீது மிகுந்த ஆர்வம் காட்டுபவர்கள். மேலும், 'இக்கிகை' (ikigai) என்ற வாழ்வியல் தத்துவத்தை பின்பற்றி நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

அவர்கள் வயிறு நிரம்ப சாப்பிடுவதைத் தவிர்ப்பது போன்ற சில ஆரோக்கியமான வாழ்க்கை முறை பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளனர்.

**நெருக்கடியிலிருந்து தப்புமா ஜப்பான்?**

புதிய பிரதமர் பெண்களின் உடல்நலப் போராட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் ட்ரம்ப் அரசுடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. அந்த சவாலை டகாய்ச்சி எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.







மேலும், ரஷ்யாவிடமிருந்து எரிசக்தி இறக்குமதியை ஜப்பான் நிறுத்த வேண்டும் என்றும், ராணுவத்திற்கான செலவை அதிகரிக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் கூறி வருகிறார். அது குறித்தும் ஒரு திடமான முடிவை டகாய்ச்சி எடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறான உலகளாவிய சவால்களை புதிய பெண் பிரதமர் வெற்றிகரமாக சமாளித்து விடுவார் என்றே ஜப்பானிய மக்கள் திடமாக நம்புகிறார்கள்.

மேலும் மந்தமான பொருளாதாரத்தை எதிர்த்துப் போராடுவது, பாழடைந்த அமெரிக்க-ஜப்பான் உறவை வழிநடத்துவது மற்றும் ஊழல்கள் மற்றும் உள் மோதல்களால் உலுக்கிய ஆளும் கட்சியை ஒன்றிணைப்பது ஆகியவை அவரது பல சவால்களில் அடங்கும்.





உலகளாவிய ரீதியில் அரசியலில் அதிக அளவில் பெண்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசியல் மூலமாக ஒரு நாட்டை ஆளும் வல்லமையை அடைந்துள்ளனர். உலக அளவில் அதிக காலம் பதவியில் உள்ள பெண் தலைவராக கடந்த ஆண்டு வங்கதேசத்தில் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஷேக் ஹசீனா என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வங்காளதேசத்தின் பிரதமருமான ஷேக் ஹசீனா 1996 முதல் 2001 வரை பிரதமராக பதவி வகித்தார். பின்னர் 2008-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார். 2008 முதல் 2024 ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் 2024 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மக்கள் போராட்டம் காரணமாக அவர் பதவியை விட்டு நீக்கப்பட்டார். இதையடுத்து அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதன் மூலம் ஷேக் ஹசீனா 16 ஆண்டுகளாக அதிக காலம் பதவி வகித்து வந்த உலகின் முதல் பெண் தலைவர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

இதற்கு முன்னதாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி 15 ஆண்டுகளும், ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் 14 ஆண்டுகளும், இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரட் தாட்சர் 11 ஆண்டுகளாக அதிக காலம் பதவி வகித்த பெண் தலைவர்கள் என்ற பெருமையை பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல நாடுகளில் பெண்கள் தலைமைப் பதவிகளை வகித்து வந்திருக்கின்றனர். ஆனால் தற்போது ஜப்பானில் பெண் ஒருவர் தலைமை பதவியை வகிக்கிறார். ஆயினும் ஜப்பான் தற்போது கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. இந்நிலையில், அந்நாட்டின் முதல் பெண் பிரதமராக சனே டகாய்ச்சி தேர்வாகியிருக்கிறார். இவர் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பாரா? என்று எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிசக்தி அமைச்சரின் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஒக். 26

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சேவைக்காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு எரிசக்தி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை, எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உடனடியாக அமுலாகும் வகையில் இரத்து செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எச். பி. நிரோஷனின் பதவிக் காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, கடந்த 15ஆம் திகதி எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவால் அவருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒக்ரோபர் 15ஆம் திகதி எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவால் அனுப்பப்பட்ட கடிதத்தில், மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்த அவரது பதவிக் காலம் அடுத்த வருடம் ஜூன் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக எச். பி. நிரோஷனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி அனுமதி வழங்கியுள்ளதாகவும் செயலாளர் தனது கடிதத்தில் பணிப்பாளர் நாயகம் நிரோஷனுக்கு அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இந்தக் கடிதம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி கடந்த 22ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி, சம்பந்தப்பட்ட நியமனத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யுமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த நியமனத்துக்கு தாம் எந்த வகையிலும் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இந்த நியமனத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யுமாறு அமைச்சர் எழுத்து மூலம் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

மேலும், அத்தகைய நீட்டிப்புக்கு அங்கீகாரம் கோருவதும் ஒரு தவறான முன்வைப்பாகும் என்றும் அமைச்சர் தனது கடிதத்தில் அமைச்சின் செயலாளருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தக் காரணத்தால், கடந்த 15ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்தக் கடிதம் உட்பட பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் தொடர்பாக அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீளப் பெறுமாறு எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, செயலாளருக்கு கடிதம் மூலம் உத்தரவிட்டுள்ளார்.

# பல இடங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, ஒக். 26

நாட்டின் பல மாவட்டங்களில் நிலவும் சீரற்ற வானிலையைத் தொடர்ந்து, மத்திய மலைநாட்டில் உள்ள பல மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய தொடர் மழை பெய்து வருகிறது.

இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ச்சியான மழை காரணமாக மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

இதனால், பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# நானுஓயாவில் வீட்டை உடைத்து தங்க நகை, பணம் கொள்ளை

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக். 26

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமர்செட் பகுதியில் 8 இலட்சத்து 10ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்த சந்தேகநபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக நானுஓயா குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், நானுஓயா தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி முதன்மை பொலிஸ் பரிசோதகர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, நுவரெலியா தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் நானுஓயா சமர்செட் பகுதியை சேர்ந்த 29 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், விசாரணையின் பின்னர் அவரிடமிருந்து நகைகள், பணம் மற்றும் ஏரிஎம் அட்டை என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திருடப்பட்ட தன்னியக்கப் பணப்பரிமாற்ற அட்டையைக் கொண்டு 50 ஆயிரம் ரூபாயை எடுத்து பொருட்கள் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)



# சம்மாந்துறையில் கடும் காற்று

சம்மாந்துறை, ஒக். 26

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையால் பல மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்து போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் எம். மாஹிரின் பணிப்புரையின்படி வீதிகளில் விழுந்த மரங்களை அகற்றும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் அப்துல் மஜீட்டின் நேரடி கண்காணிப்பில், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வீதிகளில் விழுந்த மரங்கள் இரவோடிரவாக வெட்டி அகற்றப்பட்டு போக்குவரத்து சீரமைக்கப்பட்டது. (எ-08)

# சீர்திருத்தங்களை முன்னெடுக்க...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது பின்வாங்காமல் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பெருமளவில் பேச்சுவார்ததைகளையும் கலந்தாலோசனைகளையும் நடத்துவதில் அக்கறை காட்டவேண்டியது அவசியம் என்பதையே உணர்த்துகின்றன.

கலந்தாலோசனை முன்னேற்றத்தை தாமதிப்பதில்லை, பதிலாக முன்னேற்றத்தை அது சாத்தியமாக்கும். கலந்தாலோசனை இல்லை என்றால் சிறந்த சீர்திருத்தங்கள் கூட தடுமாறி நின்று போய்விடும். அரசாங்கம் அதன் சொந்த வட்டத்துக்கு அப்பால் கூட்டுப்பங்காண்மைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். சிவில் சமூகம், மதத்தலைவர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிறுபான்மைக் குழுக்கள் சீர்திருத்தங்களுக்கு தடையில்லை. உகந்த முறையில் கையாண்டால் அவர்கள் மாற்றத்துக்கான இயந்திரமாக விளங்குவார்கள்.

தேசிய நல்லிணக்கச் செயன்முறையைப் பொறுத்தவரையிலும் கூட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தையும் கலந்தாலோசனையும் அவசியம். கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடைந்த வெற்றியை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் மூலமாக நிலைநிறுத்த வேண்டிய தேவையிருக்கிறது. தேசிய நல்லிணக்கச் செயன்முறையை தொடர்ந்து தக்கவைக்க களத்தில் பெருமளவு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் மக்களின் நிலங்களை விடுவிக்க வேண்டும். மனிதப் புதைகுழிகளை தோண்ட வேண்டும். குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு பொறுப்புக்கூற வைக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இழப்பீடுகளை வழங்க வேண்டும். அத்துடன் அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களையும் நடத்த வேண்டியது அவசியமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இவை தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவையை மக்களும் சம்பந்தப்பட்ட தரப்புக்களும் புரிந்து விளங்கி ஏற்றுக் கொள்வதற்காக அவர்களுடன் கலந்தாலோசனைகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகும். ●

# மாகாணசபை தேர்தல்கள்:...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளிடம் இல்லை.

அதனால், மாகாண ஆட்சிமுறையை தவிர, தற்போதைக்கு வடக்கு, கிழக்கு மக்களுக்கு வேறு மாற்று கிடையாது. இந்த யதார்த்த நிலையை புரிந்துகொள்ளாமல் செயற்பட்டால் எந்தவிதமான அதிகாரப்பகிர்வு ஏற்பாடும் இல்லாத மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் விடப்படும் ஆபத்தான சூழ்நிலை உருவாகுவதை தவிர்க்க முடியாமல் போகும்.

நீண்டகாலத் தீர்வுகளைப் பற்றி நெடுகவும் பேசிக்கொண்டிருக்கலாம். சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்து தமிழ்க்கட்சிகள் முக்கால் நூற்றாண்டாகப் பேசிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றிடம் அத்தகைய தீர்வு ஒன்றை எவ்வாறு அடைவது என்பதற்கான வழிவரைபடம் எதுவும் கிடையாது.

அதனால், மாகாண ஆட்சிமுறையை அதன் குறைபாடுகளுக்கு மத்தியிலும் பாதுகாப்பது உடனடித் தேவையாக இருக்கிறது. மாகாணங்களுக்கு உரிய பெருமளவு அதிகாரங்களை மத்திய அரசாங்கங்கள் பறித்தெடுத்திருக்கின்றன என்பது உண்மை. ஆனால், வடக்கு, கிழக்கில் மாகாணசபை முறையை அதற்கு இருக்கக்கூடிய எஞ்சிய அதிகாரங்களுடனாவது பயன்படுத்துவதற்கு முயற்சிக்காததில் தமிழ்க்கட்சிகளுக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதும் உண்மையே.

அதனால், மாகாண ஆட்சிமுறையை காப்பாற்றுவதற்கும் தமிழ் மக்கள் மத்தியில் அது தொடர்பில் விளக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் தமிழ்க்கட்சிகளினால் காலந்தாழ்த்தியாவது தற்போது முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மாகாணசபை முறையை வலியுறுத்துவது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் தரத்தைக் குறைத்துவிடும் என்று ஒரு கருத்தை சிலர் முன்வைக்கிறார்கள். கற்பனையில் இருக்கும் தீர்வின் தரம் குறைந்துவிடும் என்பது உண்மையே. ●

# தமிழ்நாட்டு....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகியது. கட்சிகள், தனிநபர் கம்பெனிகளாக மாற்றமடையத் தொடங்கின. கலைஞர், எம்ஜிஆர் போன்றோரின் மறைவுக்குப் பின்னர் அரசியல் முற்றிலுமாக வர்த்தகமயமாகி யது. அதனாலேயே, திமுக, அண்ணா திமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் அதிகாரத்தை நோக்கியே ஓடுகின்றன. எந்தவொரு அரசியல் கட்சியிடமும் மருந்துக்கேனும் கொள்கை கிடையாது. அதனாலேயே, சில்லறைத்தனமான நடவடிக்கைகளைக் காண முடிகின்றது.

திராவிட "மொடல்" என "பிலிம்" காட்டுவதும். தமிழ்நாட்டை "தலை குனிய விடமாட்டேன்" எனக் கோஷமிடுவதும், மருத்துவமனைக்கு வருகின்ற வர்களை நோயாளிகள் என்பதற்கு பதி லாக மருத்துவப் பயனாளர்கள் என அழைக்கவேண்டும் என்று சொல்வதும் தமிழக முதலமைச்சரைக் "காமெடிய னாக" ஆக்கிக்கொண்டிருக்கின்றன.

முதலமைச்சர் ஸ்டாலின், எதிர்க்கட் சித்தலைவர் எடப்பாடி பழனிச்சாமி முதல் கமல், சீமான், விஜய் வகையறாக் கள் வரையான அனைவருமே அரசியல் "காமெடியனாகவே" ஆசைப்படுகின் றனர். அதுவே தமிழ்நாட்டு அரசியல் திணறுகின்றமைக்கு சாட்சியாகின்றது. ●

# போதைப்பொருள்:...

மருத்துவர்கள், கல்விச் சமூகம், கருத்துருவாக்கிகள், மதத் தலைவர்கள், படைப்பாளிகள், ஊடகங்கள் என்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும் கூட்டாகச் சேர்ந்து உழைக்க வேண்டும். வீடு வீடாக இருந்தால், ஊர் ஊராக இருந்தால் அங்கே சுய கவசங்கள் இருக்கும். தமிழ் மக்களை யாரும் தோற்கடித்துவிட முடியாது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே, ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே, மதத் தலைவர்களுக்கும் அந்த மதத்தைப் பின்பற்றும் மக்களுக்கும் இடையே இடைவெளிகள் வளரும்போது அந்த இடைவெளிக்குள் புறத்தியார் வருவார்கள்.

ஆசிரியர்களும் மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் கருத்துருவாக்கிகளும் முன்னுதாரணங்களாக வாழும்போது இளையோர் இலட்சியத்தின்பால் ஈர்க்கப்படுவார்கள். அண்மையில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஒரு கருத்துத் தெரிவித்திருந்தார், போதைப்பொருள் குற்றவாளிகளைத் தூக்கில் போடவேண்டும் என்று. முகநூலில் அந்தச் செய்திக்கு கீழே ஒருவர் எழுதியிருந்தார் "அதன் பின் எங்களுக்கு நாடாளுமன்றத்தில் 12 பேர்கள்தான் மிஞ்சுவார்கள்" என்று. அந்தப் பன்னிரண்டு பேர் ஆரெண்டு எழுதியவருத்தான் தெரியும். ஆனால் தலைவர்களும் வழிநடத்தும் பொறுப்பில் இருப்பவர்களும் முன்னுதாரணங்களாக மாறும்போது இளையோர் உதிரிகளாக போதைப்பொருள் வலைக்குள் ஈசல்களைப்போல சிக்க மாட்டார்கள். இலட்சியவாதிகளாக கழுகுகளைப்போல மேலெழுவார்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

07.00 மணி வரை மின் துண்டிக்கப் படுவதால், யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

வேலைகள் பூர்த்தியாகியவுடன் மின் இணைப்பானது உடனடியாக மீள வழங்கப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (அ)

## முன்னாள்...

தமக்குள்ள ஆதரவை நாடிபிடித்து பார்க்கும் வகையிலுமே முன்னாள் எம்.பிக்கள் இவ்வாறு களமிறங்கவுள்ளனர்.

நவீன் திஸாநாயக்க, உதய கம்மன்பில, ஹிருணிக்கா பிரேமசந்திர, முஷாரப், மருதபாண்டி ராமேஸ்வரன், யோகேஸ்வரன் உட்பட மேலும் பல முன்னாள் எம்.பிக்களே போட்டியிடுவது பற்றி ஆராய்ந்துவருகின்றனர்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் வடக்கிலுள்ள முன்னாள் எம்.பிக்களும் போட்டியிடவுள்ளனர். குறிப்பாக கட்சி தீர்மானிக்குமானால் முதல்வர் வேட்பாளராக களமிறங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவதற்காக சில எம்.பிக்கள் பதவி விலகவுள்ளனர். மலையகத்திலுள்ள முக்கிய சில அரசியல் பிரமுகர்களும் தேர்தலில் குதிக்கவுள்ளனர். (அ)

## ரணில்-சஜித் கட்சி...

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களில் 50 வீதமானோர் தற்போது தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி சங்கமம் இவ்வருடத்துக்குள் வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

2022 இல் பாராளுமன்றத்தைக் கொளுத்துவதற்கு வந்த நபர்களுக்கு எதிராக அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் - என்றார். (அ)

## ஒருசிலர்...

எண்ணம் இன்றைய அரசாங்கத்துக்கு இருக்கின்றதா என்று எனக்குத் தெரியவில்லை.

காலம் இழுத்தடிக்கப்படுவதே தவிர அரசாங்கம் இன்னமும் ஊக்கமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பது தான் என்னுடைய நிலைப்பாடு.

இலங்கை நீண்டகாலமாக இனவாத போரை நடத்தியதே தவிர பொருளாதார ரீதியாக வளரக்கூடிய திராணியுள்ள நிலையை ஒருபோதும் உருவாக்க வில்லை.

இலங்கையின் கடந்த அரசாங்கங்களும் அரசை நிர்வகித்த தலைவர்களினதும் நோக்கம் என்பது மீண்டும் அடுத்த முறை எப்படி அரசியலில் இருப்பது என்பதே. குறித்த தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையால் இன்று இலங்கையின் பொருளாதாரம் கீழ் மட்டத்துக்கு சென்றுள்ளது.

கடந்த அரசாங்கங்களும் கடனை பெற்றுக் கொண்டதைத் தவிர சொந்த பொருளாதாரத்தை எப்படி உயர்த்தலாம் என்பதை சிந்திக்கவில்லை. நலன்புரிகளை எதிர்பார்த்து வாழக் கூடிய மனநிலையே மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

மேலும் மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புகளைத் தேடுவதும் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்வதுமே இலங்கையின் தற்போதைய நிலையாக உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் அந்நிய செலாவணி இலங்கையை காப்பாற்றுகிறது. இல்லையேல் இலங்கையின் பொருளாதாரம் பாரிய சரிவையே சந்திக்கும் - என்றார். (அ)

## கோப்பாய்...

சமிக்ஞைக்காக, எதிர் பகுதியில் காத்திருந்த ஐந்து வாகனங்கள் மீது, குறித்த ஹயஸ் வாகனம், சமிக்ஞை நேரம் முடிவடையும் வேளையில் வேகமாக கடந்து செல்ல முற்பட்ட போது, குறித்த விபத்து பதிவானதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, தனியார் பேருந்து, மோட்டார் சைக்கிள், கப்ரக வாகனம், ஹயஸ் உள்ளிட்ட வாகனங்கள் விபத்துக்குள்ளாகின. இதனால், குறித்த இடத்தில் சற்று நேரம் பதற்றம் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில், 6 பேர் காயமடைந்த நிலையில், பலத்த காயங்களுக்குள்ளான நபர் ஒருவர் உட்பட 4 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இருவரும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை, கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## குற்றச்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் குடிமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொறுப்பு நாட்டின் தலைவரான ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் உள்ளது.

ஒரு பிரதேச சபைத் தலைவர் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக பொலிஸாருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தார்.

அவருக்கு வழக்குகள் இருக்கிறதா? இல்லையா என்பதல்ல முக்கியம்

இங்கே சில அமைப்புசார் குற்றவாளிகள் முகத்தை மூடி கடும் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

ஏனெனில் அவர்களின் உயிரை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கே உண்டு.

ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு பிரதேச சபைத் தலைவர், ஒருவர் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக தெரிவித்தபோது ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை?

இதேபோல் ஏப்ரல் தாக்குதல் சமயத்திலும் புலனாய்வு அறிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன.

அதேபோல் துறைமுகத்துக்கு வந்த இரண்டு கொள்கலன்களில் ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் இருக்கலாம் என்று அமெரிக்க புலனாய்வு நுண்ணறிவு எச்சரித்திருந்தும் அவை வெளியேற அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறிருக்க இந்த அரசாங்கம் ஒருபுறம் புலனாய்வு அறிக்கைகளை புறக்கணிக்கிறது.

மறுபுறம் தங்களது அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற மக்கள் பாதுகாப்பை புறக்கணிக்கிறது.

எனவே திட்டமிடப்பட்ட குற்றங்கள் அரசு ஆதரவோடு நடத்தப்படுகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

ஏன் என்றால் அந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்த டான் பிரியசாத் கொலை செய்யப்பட்டார்.

மரணச் சான்றிதழ் கூட வழங்கப்படுவதற்கு முன்பே விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் வேறு விதமான விடயம் என்றார்.

இப்போது ஒரு பிரதேச சபைத் தலைவர், மக்களுக்கு உதவ அரச அதிகாரிகளுடன் பொது மக்கள் சந்திப்பில் அமர்ந்திருந்தபோது, அவரை சபைக்குள் வந்து சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

அப்பொழுது, துப்பாக்கிதாரிகள் துப்பாக்கியுடன் எப்படி உள்ளே வந்தார்கள்?

இந்த சம்பவம் எப்படி திட்டமிடப்பட்டது? பிரதேச சபைக்கு பொலிஸ் பாதுகாப்பு இருந்ததா? சபைக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்ததா?

இதற்கான விடயங்களை ஆராயமுன், பொறுப்புள்ள அமைச்சர் இதை ஒரு திட்டமிடப்பட்ட குற்றக் குழுவின் செயல் எனக் காட்ட முயல்கிறார்-என்றார். (அ)

# செவ்வந்தியுடன் ராஜபக்ஷக்களுக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை!

### சமல் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 26

"பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலை சூத்திரதாரி இஷாரா செவ்வந்தியை வெளிநாட்டில் வைத்து இலங்கைப் பொலிஸ் படை கைது செய்ததை நாம் வரவேற்கின்றோம். இந்த இஷாரா செவ்வந்தியுடன் ராஜபக்ஷக்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை."

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஷாரா செவ்வந்தியிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்த வேண்டும். பாதாள உலகக் குழுவினர் தமது விருப்பப்படி இஷாரா செவ்வந்தியை இயக்கியுள்ளனர். அவரைச் சும்மா விட முடியாது. அவருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும்.

இஷாரா செவ்வந்தியுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவரினதும் பெயர் விவரங்களையும் அரசு வெளியிட்டு அவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

இஷாரா செவ்வந்தியுடன் ராஜபக்ஷக்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. சமூக ஊடகங்களில் வெளிவரும் போலித் தகவல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்." - என்றார். (அ)

# 'மொந்தா' புயலால் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், ஒக். 26

மத்திய வங்காள விரிகுடாவில் தோன்றிய தாழமுக்கம் தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது முல்லைத்தீவுக்கு கிழக்காக 749 கி.மீ. தொலைவில் காணப்படும் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை 27ம் திகதி புயலாக மாற்றம் பெறும். இது வடமேற்கு மேற்கு திசையில் நகர்ந்து மறுதினம் 28 இரவு அல்லது 29 காலை இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் காக்கிநாடாவில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு 'மொந்தா' எனப் பெயரிடப்படும். இந்த பெயரினை தாய்லாந்து நாடு வழங்கியுள்ளது. 2025/2026 வடகீழ்ப் பருவக்காற்று காலத்தில் உருவாகவுள்ள முதலாவது புயலாக இது அமையும்.

இந்த புயலினால் இலங்கையின் எந்த ஒரு பகுதிக்கும் எந்த ஒரு பாதிப்பும் கிடையாது. எனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 28.10.2025 வரை மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும் கிழக்கு கரையோரப் பகுதிகளில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை கரையோரப் பகுதிகளில் சற்று கனமான மழைக்கு வாய்ப்புள்ளது. இடி மின்னல் நிகழ்வுகளும் அவ்வப்போது இடம்பெறும்.

அதே வேளை நாளை 27.10.2025 வரை வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதியில் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

இந்த புயலினால் அடுத்த சில நாட்களில் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு நெருக்கடி நிலை உருவாகும். அதாவது எங்கள் பகுதி வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதன் முழுவதையும் இந்த புயல் உள்ளீர்த்துக் கொள்ளும் என்பதனால் எதிர்வரும் 28.10.2025 முதல் 06.11.2025 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காது. ஆனாலும் பருவக் காற்று காரணமாக அவ்வப்போது சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும். - என்றார். (அ)

## கந்தரோடையில்...

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த சுன்னாகம் பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் இணைந்து, விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

## மதுபோதையில்...

அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, யாழ்தேவி ரயிலுக்கு வேறொரு கட்டுப்பாட்டாளர் நியமிக்கப்பட்ட நிலையில் அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கிப் புறப்பட்டுள்ளது. (அ)

## ரணில்...

கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வைப்பதற்குரிய முயற்சியே இடம் பெற்றுவருகின்றது.

அத்துடன், இருவரும் இணைந்து கூட்டு செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுவருகின்றது.

இரு கட்சிகளும் ஒரு கட்சியாக இணைவதற்கு இரு தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எனவே, பொது வேலைத்திட்டத்தின்கீழ் ஒன்றிணைந்து, பொது சின்னத்தில் - பொதுப் பட்டியலின்கீழ் தேர்தலை சந்திப்பது பற்றி தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சு...

பதவிக் காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, கடந்த 15 ஆம் திகதி எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவால் அவருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த கடிதத்தில், மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்த அவரது பதவிக் காலம் அடுத்த வருடம் ஜூன் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக எச்.பி. நிரோஷனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, அனுமதி வழங்கியுள்ளதாகவும் செயலாளர் தனது கடிதத்தில் பணிப்பாளர் நாயகம் நிரோஷனுக்கு அறிவித்திருந்தார்.

எனினும், இந்தக் கடிதம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி கடந்த 22 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி, சம்பந்தப்பட்ட நியமனத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யுமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த நியமனத்திற்கு தாம் எந்த வகையிலும் அனுமதி வழங்கவில்லை என்றும் அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## சூறாவளியாக மாறும் காற்றழுத்தம்

கொழும்பு, ஒக். 26

நாட்டின் வடகிழக்கு, தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தொடர்ந்து உருவாகி மேற்கு , வடமேற்கு நோக்கி நகரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று தென்கிழக்கு மற்றும் அருகிலுள்ள மத்திய வங்காள விரிகுடாவில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவாகும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இன்றைக்குள் ஆழமான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாகவும், நாளை சூறாவளியாகவும் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## பணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள்!

கொழும்பு, ஒக். 26

சுகாதார அமைச்சின் பல் மருத்துவ சேவைகள் பிரிவில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிர்வாக குழப்ப நிலையை ஆட்சேபித்து, அரச பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கம் அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதியன்று நாடளாவிய ரீதியில் இந்த பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

தமது பிரச்னைகள் தொடர்பாக 18 மாதங்களாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும், தீர்வு கிடைக்காத நிலையிலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த பணிப்புறக்கணிப்பு, அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்று அரச பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## விசாரணைக்கு ஒத்துழைக்காத முன்னாள் தவிசாளருக்கு மறியல்

கொழும்பு, ஒக். 26

சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்ட கலேன்பிந்துனுவெவ பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சமந்த நாமல் விஜேவர்தனவை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட அழைப்பாணையை சந்தேகநபர் புறக்கணித்த நிலையில் இந்தக் கைது இடம்பெற்றதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சமந்த நாமல் விஜேவர்தனவுக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்துக்காக நேற்று முன்தினம் காலை இவர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)

## 17 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை!

### 22,620 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 26

நுவரெலியா, கண்டி, பதுளை, குருநாகல், காலி உட்பட நாட்டில் 17 மாவட்டங்களில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 5, 579 குடும்பங்களைச் சேர்ந்த 22, 620 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம், மண் சரிவால் 2 வீடுகள் முழுமையாகவும், 697 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். (அ)

# 2026 இல் வாகன இறக்குமதிகள் சாதாரண நிலைக்குத் திரும்பும்

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



கொழும்பு, ஒக். 26

**இலங்கையில் வாகன இறக்குமதிகள், 2026 ஆம் ஆண்டில் சாதாரண நிலைக்குத் திரும்பும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் கேள்வியின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டுக்குள், இலங்கையர்கள் வாகன இறக்குமதிக்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு பில்லியன் டொலரை விட அதிகமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையில், வாகன இறக்குமதி வரிகளைக் கொண்டு இந்த முறை, பாதீட்டு பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (அ)

## பாதாள குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் குறித்து விசாரணை!

கொழும்பு, ஒக். 26

பாதாள குழுக்களுடன் தொடர்புடைய அரசியல் வாதிகளின் விபரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வெளிப்படுத்தப்படும். அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரால் பாராளுமன்றத்தில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெற்றுவருகின்றது. அதன் அடிப்படையில் துப்பாக்கிதாரிகள் மற்றும் அவர்களை இயக்கியவர்களை விரைவில் கைது செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

மக்கள் பிரதிநிதிகளுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கை சம்பந்தமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்துவார்.

அத்துடன், பாதாள குழுக்களுடன் தொடர்புடைய அரசியல் வாதிகள் தொடர்பான விவரத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விரைவில் வெளியிடுவார்." - எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். (அ)

## புலிகள் அமைப்பு உறுப்பினரின் குடிவரவு குறித்து ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் விசாரணை!

ஒட்டாவா, ஒக். 26

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராகக் கருதப்படும் ஒருவரின் குடிவரவு விண்ணப்பம் குறித்து கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சரான ஹரி ஆனந்தசங்கரியின் தொகுதி அலுவலகம், மீண்டும் மீண்டும் அரசாங்க அதிகாரிகளிடம் விசாரித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதிமன்ற ஆவணங்கள் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக கனேடிய ஊடகங்கள் கூறுகின்றன. எவ்வாறாயினும், அமைச்சரின் பேச்சாளர், தமது அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறித்து தெளிவுப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி பதவிக்கு வருவதற்கு முன்னர், அவரது தொகுதி அலுவலகம் ரஜினி இராஜமனோகரன் என்பவரின் குடிவரவு வழக்கில், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில், மூன்று முறை குடிவரவு, ஏதிலிகள் மற்றும் குடியுரிமை தொடர்பான கனேடிய அதிகாரிகளிடம் நிலை குறித்து விசாரித்துள்ளது.

முன்னதாக, ரஜினி இராஜமனோகரன் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஓர் 'உறுப்பினர்' என்ற அடிப்படையில் கனடாவுக்குள் நுழைய தகுதியற்றவர் என எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

எனினும் ரஜினி இராஜமனோகரன், தான் கட்டாயப்படுத்தப்பட்டு முகாமில் சமையல் வேலை பார்த்ததாகவும், காயமடைந்த போராளிகளுக்கு உதவிகள் செய்ததாகவும், தீவிரவாதத்துடன் தனக்கு நேரடித் தொடர்பு இல்லை என்றும் மறுப்பு தெரிவித்திருந்தார்.

இருப்பினும், இந்த வழக்கின் சமீபத்திய தீர்ப்பில், கூட்டாட்சி நீதிமன்றம் குடிவரவு அதிகாரியின் முடிவை உறுதி செய்து, இராஜமனோகரனின் கனடாவுக்குள் குடியேறும் முயற்சியை நிராகரித்தது.

இதன் பின்னரே அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியுடன் தொடர்புடைய இந்த தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக ஒரு வருடத்திற்கு முன்பு, விடுதலைப் புலிகளின் 'உறுப்பினர்' எனக் கருதப்பட்ட செந்தூரன் செல்வக்குமரன் என்பவரின் குடிவரவு விண்ணப்பத்தை அங்கீகரிக்குமாறு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் கடிதங்கள் எழுதியதாக தகவல் வெளியாகி இருந்தது.

தற்போது இரண்டாவது முறையாகவும் ரஜினி இராஜமனோகரன் விவகாரத்தில் இத்தகைய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த நிலையில், அமைச்சரின் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஜினி இராஜமனோகரனின் வழக்கில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள், "விண்ணப்பங்களின் நிலை குறித்து அறியும் வழக்கமான பணிகள்" என்றும், அமைச்சரின் அலுவலகம் எந்தவிதமான ஆதரவு கடிதத்தையும் வழங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராஜமனோகரன் அமைச்சரின் தொகுதியைச் சேர்ந்தவர் அல்லர் என்றும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொதுப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற பிறகு, ஹரி ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகள் மற்றும் உலகத் தமிழர் இயக்கம் தொடர்பான முடிவுகளில் இருந்து தன்னைப் பொறுப்பு விலக்கிக் கொண்டதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் அநுர கருணாதிலக 27ஆம் திகதி இந்தியா பயணம்

கொழும்பு, ஒக். 26

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக, இந்திய கடல்சார் வாரம் 2025 நிகழ்வில் பங்கேற்பதற்காக, எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மும்பை செல்லவுள்ளார்.

அமைச்சர் அநுர கருணாதிலக்க தனது விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான துறைமுக மேம்பாடு, கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்திய பிரதி அமைச்சர் சர்பானந்தா சோனோவாலுடன் இருதரப்பு பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார்.

அவர் இந்திய கடல்சார் வாரத்தின் அமைச்சரவை அமர்வில் பங்கேற்பதுடன், கடல்சார் மற்றும் தொழில்துறைப் பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார்.

27 முதல் 31 வரை நடைபெறவுள்ள இந்திய கடல்சார் வாரம், சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், துறைமுக நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதற்கும், கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாடத் துறைகளில் உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும் ஒரு முக்கிய தளமாகச் செயல்படும் என்று கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org